# *30.05.2023* செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்ட தீர்மானங்கள்

**ம.அ2ந.க.எண்.இ1/1003/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:279/2023** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2, பகுதி-5, வார்டு-19ல் மஞ்சம்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த அம்மா உணவகம் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2, பகுதி-5. வார்டு-19ல் மஞ்சம்பாக்கம் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி *ISWD* பணி செய்ய அம்மா உணவகத்தின் ஒரு பகுதி நெடுஞ்சாலையின் பகுதியில் அமைந்துள்ளதால் பணியை தொடர முடியவில்லை. மேலும் இந்த அம்மா உணவகத்தின் மேற்கூரை, தரைத்தளம் மற்றும் சுவர்கள் மிகவும் பழுதடைந்துள்ளது.

மேற்கண்ட கட்டிடத்தினை இடிப்பதற்கான பணியை மண்டலம்-2ன் மூலம் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டிடத்தை இடிப்பதற்கு 2022-203 ஆண்டு அலுவலக விலைப்பட்டியல் அடிப்படையில் கணக்கிடப்பட்ட கட்டிட புத்தக மதிப்பு ரூ.25,127.75/- மற்றும் கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீடு தொகை ரூ.1,11,000/- என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி கீழ்க்காணும் வகையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ எண் | வார்டு எண் - 19 | மண்டலம் - 2 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மஞ்சம்பாக்கம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | சுமார் 8 வருடங்களுக்கு முன் |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 270.00 சதுர மீட்டர் |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 285.00 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | பதிவேட்டில் இக்கட்டிடம் குறித்த விபரம் இல்லை. |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுளளது? | ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் பணி முடிவுபெற்றபின் மீதமுள்ள பகுதியில் காமராஜர் சாலையின் வடக்கு புறமாக உள்ள இடத்தில் மன்றத்திடம் உரிய அனுமதி பெற்று மீண்டும் அம்மா உணவகம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மழைநீர் கால்வாய் அமைய உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்-2 |
| 10 | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண்.708, நாள்.12.12.2022 |
| 11 | கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ. 25,127.75/- |
| 12 | கட்டிடத்தை இடிப்பதற்கான மதிப்பீடு | ரூ. 11,000 /- |

எனவே, மண்டலம்-2, பகுதி-5, வார்டு-19ல் மஞ்சம்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள பழுதடைந்த அம்மா உணவகம் கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.049/2023, நாள். 19.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.156/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.3.ந.க.எண். 2465/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:280/2023** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 3 - பகுதி - 8 - வார்டு-31 எம்.ஜி.ஆர் நகர் 2வது தெருவில் அமைந்துள்ள விளையாட்டு திடல் வளாகம் - பழைய பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற பழைய கட்டிடம் இடித்துவிட்டு புதிய நூலகம் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி.**

மண்டலம்-3, வார்டு 31வது மாமன்ற உறுப்பினர் அவர்களின் 08.03.2023 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 3, பகுதி – 8, வார்டு 31 எம்.ஜி.ஆர் நகர் 2வது தெருவில் அமைந்துள்ள புதியதாக மேம்படுத்தப்பட்டு விளையாட்டு திடல் வளாகத்தில் 40.42ச.மீ பரப்பளவில் உள்ள மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற நிலையில் உள்ள பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய நூலக கட்டிடம் கட்டி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மண்டலம்-3வது வார்டு குழு தீர்மான எண்.463 நாள்.10.03.2023ன்படி கட்டிடம் புழல் பஞ்சாயத்து யூனியன் கதிர்வேடு ஊராட்சியாக இருந்த காலத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் இந்நூலக கட்டிடம் கட்டப்பட்டது என கள ஆய்வில் தெரியவருகிறது. இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக நூலகக் கட்டிடம் கட்ட வேண்டியுள்ளது.

ஆகவே, மேற்குறிப்பிட்ட மிகவும் பழுதடைந்த உபயோகமற்ற இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பீடு பூஜ்ஜியம் ஆகும்.

| வ. எண் | கட்டிடத்தின் விவரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-3, பகுதி-8, வார்டு-31 எம்.ஜி.ஆர் நகர் 2வது தெருவில் அமைந்துள்ள விளையாட்டு திடல் வளாகத்தில் உள்ள பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | சுமார் 40 வருடங்களுக்கு முன்பு புழல் பஞ்சாயத்து யூனியன் கதிர்வேடு ஊராட்சியால் கட்டப்பட்டது. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 40.42 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 40.42 ச.மீ |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | பூஜ்ஜியம் |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | தற்போது பயன்பாட்டில் இல்லை. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய நூலகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| *8* | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| *9* | கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்? | மாமன்ற உறுப்பினர், வார்டு-*31* |
| *10* | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண்.463 நாள்.10.03.2023 |

எனவே, மண்டலம்-3, பகுதி-8, வார்டு-31 எம்.ஜி.ஆர் நகர் 2வது தெருவில் அமைந்துள்ள விளையாட்டு திடல் வளாகத்தில் உள்ள பழுதடைந்த மற்றும் உபயோகமற்ற இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக புதிய நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

*"23.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பணிகள்*)* கூட்டத்தின் தீர்மான எண்*.148/2023,* நாள்*.23.05.2023*-ன்படி இதற்கு நிலைக்குழு *(*பணிகள்*)* பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*".*

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3/1648/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:281/2023** **பொருள் எண்.03**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, பகுதி-11, வார்டு-45, கணேசபுரம் பிராதன சாலையில் அமைந்துள்ள சிதிலமடைந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, பகுதி-11, வார்டு-45ல் உள்ள கணேசபுரம் பிராதன சாலையில் அமைந்துள்ள சிதிலமடைந்த நிலையில் உள்ள உபயோகமற்ற பொது கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் - 4 | வார்டுஎண். 45 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | கணேசபுரம் பிரதான சாலையில் உள்ள பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடம். |
| 2 | கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1987ஆம் ஆண்டு. |
| 3 | கட்டிடத்தின் பரப்பளவு | தரைத்தளம் 72 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.91082.89/- |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய நிலை | மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. |
| 6 | கட்டிடம் இடித்த பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | சமுதாய நல கூடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது |
| 7 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | வார்டு மாமன்ற உறுப்பினர் |
| 8 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்: | தீர்மான எண். 54 , நாள் :15.07.2022 |

கணேசபுரம் பிராதன சாலையில் அமைந்துள்ள சிதிலமடைந்த நிலையில் உள்ள உபயோகமற்ற பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் அப்பகுதி பொது மக்கள் பயன் பெறும் வகையில் சமுதாய நல கூடம் கட்ட மாமன்ற உறுப்பினர் மன்ற கூட்டத்தில் கேட்டுக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அப்பகுதியில் அனைத்து வீடுகளிலும் கழிவறை வசதியுடன் வீடு கட்டி வாழ்ந்து வருவதால் அங்கு பொது கழிப்பிடம், மறுபடியும் கட்டுவது அவசியமற்றது என்பது குறிப்பிடதக்கது.

எனவே, மண்டலம்-4, பகுதி-11, வார்டு-45, கணேசபுரம் பிராதன சாலையில் அமைந்துள்ள பழுதடைந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.043/2023, நாள். 19.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.155/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3/1476/1/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 282 / 2023** **பொருள் எண். 04**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 4, பகுதி - 11, வார்டு - 45 டாக்டர். அம்பேத்கர் கல்லூரி சாலையில் அமைந்துள்ள பழைய வார்டுஅலுவலககட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 4, பகுதி - 11, வார்டு - 45, டாக்டர். அம்பேத்கர் கல்லூரி சாலையில் அமைந்துள்ள சிதிலமடைந்த நிலையில் உள்ள பழைய வார்டு அலுவலக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் - 4 | வார்டுஎண். 45 |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | டாக்டர்.அம்பேத்கர் கல்லூரி சாலையில் உள்ள பழைய வார்டு அலுவலக கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 1997ஆம் ஆண்டு. |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைத்தளம்:252 ச.மீ<br>முதல்தளம் :252 ச.மீ |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.607325.91/- |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம். |
| 6 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. |
| 7 | கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிதாக வார்டு அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் | மண்டலஅலுவலர்-4 |
| 9 | வார்டுகுழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்: | எண்.94, நாள் :16.11.2022 |

எனவே, மண்டலம் - 4,பகுதி - 11, வார்டு - 45 டாக்டர். அம்பேத்கர்கல்லூரி சாலையில் அமைந்துள்ள பழைய வார்டு அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. ஆகையால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.135/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.5ந.க.எண். 7843/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:283/2023** **பொருள் எண்.05**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-13, வார்டு-56 - பி.ஆர்.என்.கார்டன் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டது - இக்கட்டிடங்கள் வயது முதிர்வு காரணமாகவும் மற்றும் இயற்கை மாற்றங்கள் காரணமாகவும் வாழ்வதற்கு தகுதியற்ற பேராபத்து ஏற்படும் வகையில் உள்ளது - இக்கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-56ல் அமைந்துள்ள சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி.நகர் கிராமம், புல எண்.2252/5, மொத்த விஸ்தீரணம் 2.70 ஏக்கர் விஸ்தீரணத்தில் 2.35 ஏக்கர் பரப்பளவில் *“B.R.N.* கார்டன்” திட்டப்பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக சுமார் 60 வருடங்களுக்கு முன்பு ஒன்பது (9) எண்ணிக்கையிலான *(Block - A,B,C,D,E,F,G,H & I)* தரைத்தளம் மற்றும் முதல் தளம் *(G+1)* வீதம் 146 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளது.

இதில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாகவும் கட்டப்பட்ட 96 எண்ணிக்கையிலான குடியிருப்புகள் போக மீதம் உள்ள பகுதியில் பொது மக்கள் மூலமாக ஆக்கிரமிப்பு செய்து குடிசைகள் மற்றும் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது.

இந்த பி.ஆர்.என்கார்டன் பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாகவும் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் வயது முதிர்வு காரணமாகவும் மற்றும் இயற்கையின் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள் காரணத்தினால் அக்கட்டிடத்தில் விரிசல்களும் மற்றும் மரங்களும் வளர்ந்து உள்ளது. இதனால் இக்கட்டிடங்கள் மிகவும் சிதிலமடைந்து ஆபத்தை ஏற்படுத்தும் அபாயகரமானதாகவும் உள்ளது. மேலும் இக்கட்டிடத்தில் வசிக்கும் குடியிருப்பு வாசிகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் வாழ்வதற்கு தகுதியற்ற நிலையில் பேராபத்து ஏற்படும் வகையில் உள்ளது என கள ஆய்வில் தெரியவந்தது

மேலும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையதுறை அமைச்சர் அவர்கள், மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு நகர்ப்புறவாழ்விட மேம்பாட்டு வாரியம் அமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அதிகாரிகள் ஆகியோரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் அடிப்படையில் இக்கட்டிடங்களை இடித்துவிட்டு புதிய அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது

இந்த ஆய்வின் அடிப்படையில் பி.ஆர்.என்கார்டன் இடத்தை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வசம் ஒப்படைக்கும்படி முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மானத்தின் படி 2.35 ஏக்கர் நிலத்திற்கான நிலக்கிரையத் தொகை ரூ.4,26,075/- யினை 30.08.2022 ஆம் நாளிட்ட கடிதம் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் (கருவூலச் சீட்டு எண்.*V/2022-23/0020704.* நாள்.02.09.2022) செலுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் மேற்கண்ட நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மேற்கொள்ளும் அடுக்கு மாடி குடியிருப்பு திட்டப்பணிகளுக்காக வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் மற்றும் நில ஒப்படைப்பு செய்யப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கட்டப்பட்ட 146 குடியிருப்பு வாசிகளுக்கு கணக்கெடுப்பு மற்றும் கைரேகை ( *BIO METRIC* ) பதிவு செய்யும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இந்த 146 அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குடியிருப்பு வாசிகளுக்கு கருணைத் தொகை ஒரு

குடும்பத்திற்கு ரூ.**24,000/-**வீதம் *X* **146** குடியிருப்புகள் = ரூ.**35,04,000/-** (ரூபாய்.முப்பத்தைந்து இலட்சத்து நான்காயிரம் மட்டும்) முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல் வழங்கப்பட்டு வரவு பெறப்பட்டுள்ளது.

இந்த 146 அடுக்குமாடி குடியிருப்பு வாசிகளுக்கு புகைப்படத்துடன் கூடிய தற்காலிக ஒதுக்கீடு ஆணைகள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1) தரைத்தளம் *(10 X 26* மீட்டர்) = 260 சதுர மீட்டர்

2) முதல் தளம் = 260 சதுர மீட்டர்

கட்டிடத்தின் பரப்பளவு = 520 சதுர மீட்டர்

9 எண்ணிக்கையிலான அடுக்கு மாடி *(Block- A,B,C,D,E,F,G,H & I)* *= 9 Nos x 520* சமீ =4680 சதுர மீட்டர்

கட்டிடத்தின் மொத்த பரப்பளவு =4680 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு *= 0*

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு | பூஜ்ஜியம். |
| 2. | இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 60வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது |
| 3. | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | ஆம் |
| 4. | கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | புதிய அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்பட உள்ளது. |
| 5. | இடிப்பதற்கு அவசியம் என்ன ? | மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது |
| 6. | வார்டு குழு தீர்மான எண் | தீர்மான எண்.21/2023, நாள் 12.05.2023 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கட்டப்பட்ட *9* எண்ணிக்கையிலான *(Block- A,B,C,D,E,F,G,H & I)* தரைத்தளம் மற்றும் முதல் தளம் *(G+1)* வீதம் 146 அடுக்கு மாடி குடியிருப்புகள் கொண்ட கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

*“23.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.*147/2023*, நாள்.*23.05.2023*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.8ந.க.எண்.இ1/2674/2023**
**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:284/2023** **பொருள் எண்.06**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8, அண்ணாநகர், பகுதி-23, கோட்டம்-101, பூந்தமல்லி நெடுஞ்சாலை சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள ஏ-பிளாக் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8, பகுதி-23, கோட்டம்-101, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் ஏ-பிளாக் கட்டிடம் 1964-1965 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மேலும் இக்கட்டிட சுவர்கள் இடிந்து விரிசல் ஏற்பட்டு மற்றும் மேற்கூரையும் சேதமடைந்து மிகவும் பழுதடைந்து பயன்பாடில்லாத நிலையில் இடிந்து விழும் நிலையில் உள்ளது.

எனவே, இந்த பள்ளி கட்டிடம் பயன்படுத்தும் வகையில் இல்லாததால், இந்த கட்டிடத்தை இடித்து விட்டு 101வது கோட்டம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் புதியதாக ஏ-பிளாக் பள்ளி கட்டிடம் கட்ட மதிப்பீடு ரூ.2,65,00,000/-ற்கு தயார் செய்யப்பட்டு சிங்கார சென்னை 2.0 (TUFIDCO) நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. தற்பொழுது இவ்விடத்தில் புதியதாக கட்டப்படும் பள்ளி கட்டிடம் மாணவர்கள் பயன்பாட்டிற்கு ஏற்றதாக இருக்கும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

| வ. எண் | மண்டலம்-8 | வார்டு-101 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-8, பகுதி-23, கோட்டம்-101, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள ஏ-பிளாக் கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1964-1965 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 11654.91 சதுர அடி |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.1,53,086.57 |
| 5 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் இல்லை |
| 6 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதியதாக பள்ளி கட்டிடம் கட்டப்படவுள்ளது. |
| 7 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது |
| 8 | வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள் | தீர்மான எண்.520/2023 நாள்.08.03.2023 |

எனவே, மண்டலம்-8, பகுதி-23, கோட்டம்-101, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சென்னை நடுநிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள ஏ-பிளாக் கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"17.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தின் தீர்மான எண். 28/2023, நாள்.17.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.154/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.9ந.க.எண்.இ1/0195/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:285/2023** **பொருள் எண்.07**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 9, பகுதி - 26, வார்டு - 111, கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தில் உள்ள சிதிலமடைந்த உடற்பயிற்சி கூட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 9, பகுதி - 26, வார்டு - 111 கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தில் உள்ள சிதிலமடைந்த உடற்பயிற்சி கூட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | மண்டலம்-9 | வார்டு-111 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தில் உள்ள சிதிலமடைந்த உடற்பயிற்சி கூட கட்டிடம். |
| 2 | கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1962ஆம் ஆண்டு |
| 3 | கட்டிடத்தின் பரப்பளவு? | 99.7 ச.மீ |
| 4 | இடத்தின் பரப்பளவு | 11,788 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ. 16780.71 |
| 5 | கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் இல்லை |
| 6 | கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | மைதானமாகவே பயன்படுத்தப்பட உள்ளது. |

எனவே, மண்டலம் - 9, பகுதி - 26, வார்டு - 111, கோபாலபுரம் விளையாட்டு மைதானத்தில் உள்ள சிதிலமடைந்த உடற்பயிற்சி கூட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.157/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம. அ 9. ந. க. எண். இ 1/3340-2/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:286/2023** **பொருள் எண்.08**

**பெருநகரசென்னைமாநகராட்சி - மண்டலம் -09, பகுதி -27, வார்டு -115, தேவராஜ் சாலையில் உள்ள சிதிலமடைந்த நிலையில் உள்ள வார்டு பொறியாளர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -09, பகுதி -27, வார்டு -115, தேவராஜ் சாலையில் உள்ள சிதிலமடைந்து பல ஆண்டுகள் உபயோகமற்ற நிலையில் அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ள வார்டு பொறியாளர் அலுவலகத்தினை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதன்விவரம் பின்வருமாறு.

| வ. எண் | மண்டலம்-9 | வார்டு-115 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | தேவராஜ் சாலையில் உள்ள சிதிலமடைந்துள்ள வார்டு பொறியாளர் அலுவலகத்தினை இடித்து அகற்றும் பணி. |
| 2 | கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1980 ஆம் ஆண்டு |
| 3 | கட்டிடத்தின் பரப்பளவு? | 142.50 ச.மீ |
| 4 | இடத்தின் பரப்பளவு | 71.25 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.12,25,720./- |
| 5 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா? | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 6 | கட்டிடம்இடித்தபின் எந்தமாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | இடித்து அகற்றி வார்டு பொறியாளர், துப்பரவு ஆய்வாளர், சுகாதார ஆய்வாளர்களுக்கான அறைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

மேற்படி கட்டிடம் அமைந்த பகுதியினை சுற்றிலும் சுற்றுசுவர் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தரைத்தளத்தில் உதவி செயற்பொறியாளர் அலுவலகம், இளநிலை பொறியாளர் அலுவலகம் மற்றும் துப்புரவு மற்றும் சுகாதார ஆய்வாளர் அறைகள் மற்றும் முதல்தளத்தில் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வந்தது.

எனவே, மண்டலம் -09, பகுதி -27, வார்டு -115, தேவராஜ் சாலையில் உள்ள சிதிலமடைந்து பல ஆண்டுகள் உபயோகமற்ற நிலையில் அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ள வார்டு பொறியாளர் அலுவலக கட்டடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.139/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ9.ந.க.எண்.இ1/3340-1/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:287/2023** **பொருள் எண்.09**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, பகுதி-27, கோட்டம்-115, பீட்டர்ஸ் சாலையில் சிதிலமடைந்து அபாயகரமாக பயன்பாட்டில் இல்லாத பழைய ஆரம்ப பள்ளி கட்டிடத்தினை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-27, கோட்டம்-115, பீட்டர்ஸ் சாலையில் சிதிலமடைந்து அபாயகரமாக பயன்பாட்டில் இல்லாத பழைய ஆரம்ப பள்ளி கட்டிடத்தினை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண் | மண்டலம்-9 | வார்டு-115 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-9, பகுதி-27, கோட்டம்-115, பீட்டர்ஸ் சாலையில் சிதிலமடைந்து அபாயகரமாக பயன்பாட்டில் இல்லாத பழைய ஆரம்ப பள்ளியினை இடித்து அகற்றும் பணி. |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1972 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 288.82 ச.மீ. |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 238.63 ச.மீ. |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.259031/- |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | சிதிலமடைந்த நிலையில் உள்ளது. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | --- |

மேற்படி கட்டிடம் அமைந்துள்ள பகுதியினை சுற்றி சுற்று சுவர் அமைந்துள்ளது. தரை தளத்தில் 3 வகுப்பறைகள் மற்றும் தலைமை ஆசிரியர் அலுவலகம் மற்றும் முதல் தளத்தில் 4 வகுப்பறைகள் செயல்பட்டு வந்தது.

எனவே, மண்டலம்-9, பகுதி-27, கோட்டம்-115, பீட்டர்ஸ் சாலையில் சிதிலமடைந்து அபாயகரமாக பயன்பாட்டில் இல்லாத பழைய ஆரம்ப பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"17.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தின் தீர்மான எண். 24/2023, நாள்.17.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.150/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ9.ந.க.எண்.இ1/03555/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:288/2023** **பொருள் எண்.10**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9 - பகுதி-27, கோட்டம்-116 - டாக்டர் பெசன்ட் சாலையில் சிதிலமடைந்து உள்ள துணை மின் நிலையம் மற்றும் பயன்பாட்டில் இல்லாத சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9 பகுதி-27 கோட்டம்-116 டாக்டர் பெசன்ட் சாலையில் சிதிலமடைந்து அபாயகரமாக உள்ள துணைமின் நிலையம் மற்றும் பயன்பாட்டில் இல்லாத சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடங்களை இடித்து அகற்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | மண்டலம்-9 | வார்டு-116 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-9, பகுதி-27, கோட்டம்-116 டாக்டர் பெசன்ட் சாலையில் சிதிலமடைந்து அபாயகரமாக உள்ள துணைமின் நிலையம் மற்றும் பயன்பாட்டில் இல்லாத சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடங்கள். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1977 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 126.65 ச.மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 270.08 ச.மீ. |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.23730/- |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | சிதிலமடைந்த நிலையில் உள்ளது. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பல்நோக்கு கட்டிடம் கட்டப்படவுள்ளது. |

மேற்படி கட்டிடம் அமைந்துள்ள பகுதியினை சுற்றி சுற்று சுவர் அமைந்துள்ளது. இவ்விடத்தில் ஐஸ்ஹவுஸ் துணைமின் நிலையம் மற்றும் பயன்பாட்டில் இல்லாத சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் உள்ளது.

எனவே, மண்டலம்-9, பகுதி-27, கோட்டம்-116, டாக்டர் பெசன்ட் சாலையில் சிதிலமடைந்து அபாயகரமாக உள்ள துணைமின் நிலையம் மற்றும் பயன்பாட்டில் இல்லாத சட்டமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.158/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.9நக.எண்.இ1/02876/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:289/2023** **பொருள் எண்.11**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119, பாலாஜி நகர் 3வது தெருவில் அமைந்துள்ள சிதிலமடைந்த பழைய கோட்டம் 93 , ரேஷன் கடை மற்றும் வார்டு உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119ல் பாலாஜி நகர் 3வது தெருவில் அமைந்துள்ள பழைய கோட்டம் 93 அலுவலக (ரேஷன் கடை) மற்றும் வார்டு உறுப்பினர் அலுவலகம் சிதிலமடைந்து அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ளதால், அக்கட்டிடத்தை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அதன் விவரம் பின்வருமாறு .

| வ. எண் | மண்டலம்-9 | வார்டு-119 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | பாலாஜி நகர் 3வது தெருவில் அமைந்துள்ள சிதிலமடைந்த பழைய கோட்டம் 93 அலுவலக (ரேஷன் கடை) மற்றும் வார்டு உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்றும் பணி. |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1980 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 205 ச. மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 1800.00 ச.மீ. |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.8000/- |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | சிதிலமடைந்த நிலையில் உள்ளது. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இடித்து அகற்றி புதிய பல்நோக்கு கட்டிடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

எனவே, மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119ல் பாலாஜி நகர் 3வது தெருவில் அமைந்துள்ள பழைய கோட்டம் 93 ரேஷன் கடை மற்றும் வார்டு உறுப்பினர் அலுவலகம் சிதிலமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அக்கட்டிடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டிசமர்ப்பிக்கப்படுகிறது.

“23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.136/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.9.ந.க.எண்.இ1/02878/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:290/2023** **பொருள் எண்.12**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, பகுதி-24, வார்டு - 119ல் உள்ள பேகம் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தின் பின்புறம் உள்ள பழுதடைந்த பழைய சமையலறை கட்டிடத்தினை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119ல் உள்ள பேகம் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தின் பின்புறம் உள்ள பழுதடைந்த பழைய சமையலறை கட்டிடம் சிதிலமடைந்து அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அகற்ற மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

அதன் விவரம் பின்வருமாறு .

| வ. எண் | மண்டலம்-9 | வார்டு-119 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119ல் உள்ள பேகம் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தின் பின்புறம் உள்ள பழுதடைந்த பழைய சமையலறை இடித்து அகற்றும் பணி. |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1970 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 62 ச. மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 1550.00 ச.மீ. |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.3000/- |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | சிதிலமடைந்த நிலையில் உள்ளது. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இடித்து அகற்றி புதிய சமையலறை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

எனவே, மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119ல் உள்ள பேகம் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தின் பின்புறம் உள்ள பழுதடைந்த பழைய சமையலறை கட்டிடம் மிகவும் சிதிலமடைந்து அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அக்கட்டிடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.137/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.9நக.எண்.இ1/ 02877/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:291/2023** **பொருள் எண்.13**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, பகுதி-24, வார்டு - 119ல் உள்ள பேகம் தெருவில் அமைந்துள்ள பல்நோக்கு(Multipurpose Hall) கட்டிடத்தை இடித்து அகற்றஅனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119ல் பேகம் தெருவில் அமைந்துள்ள பல்நோக்கு கட்டிடம் சிதிலமடைந்து, அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அதன் விவரம் பின்வருமாறு .

| வ. எண் | மண்டலம்-9 | வார்டு-119 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119ல் உள்ள பேகம் தெருவில் அமைந்துள்ள பல்நோக்கு கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 1980 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு? | 145.125 ச. மீ |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு? | 1550.00 ச.மீ. |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு? | ரூ.7000/- |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | சிதிலமடைந்த நிலையில் உள்ளது. |
| 7 | அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இடித்து அகற்றி புதிய பல்நோக்கு கட்டிடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

எனவே, மண்டலம்-9, பகுதி-24, வார்டு – 119ல் பேகம் தெருவில் அமைந்துள்ள பல்நோக்கு கட்டிடம் சிதிலமடைந்து, அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.138/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.9.ந.க. எண்.03390 /2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:292/2023** **பொருள் எண்.14**

**பெருநகர சென்னைமாநகராட்சி- மண்டலம்-9, பகுதி-27, வார்டு-120 கஜபதி தெருவில் அமைந்துள்ள பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள சமுதாய நலக் கூட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

| வ. எண் | வார்டு எண்-123 | மண்டலம்-9 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | கஜபதி தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 17-08-2001 |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | 376.40 சதுரமீட்டர் (தரைதளம்)<br>376.40 சதுரமீட்டர் (முதல் தளம்) |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு? | 473.97 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.1904186.99/- |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் (கீழ் தளத்தில் கிழக்கு பகுதியில் அம்மா உணவகம் பயன்பாட்டில் உள்ளது) |
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் மேம்பாட்டுநிதியின் கீழ் புதிய சமுதாய நலக் கூடம் அமைய உள்ளது |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | 1. சமுதாய நலக் கூடத்தின் நுழைவு வாயில் கஜபதி தெருவில் அமைந்துள்ளது. இத்தெருவில் கிருஷ்ணம் பேட்டை மயான பூமி உள்ளதால் இக்கட்டிடத்தில் பொதுமக்கள் சுபநிகழ்ச்சிகள் நடத்துவதில்லை.<br>2. இக்கட்டிடத்தில் பிளாஸ்டிக் நெகிழிகளை அறைக்கும் அறவை இயந்திரம் பொருத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அரைக்கப்பட்ட நெகிழிகளை சேமிக்கும் கிடங்காக இக்கட்டிடம் உபயோகப்படுத்தி வந்த நிலையில் 2013 ஆம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்தினால் கட்டிடம் பெருமளவில் சேதமடைந்தது.<br>3. இக்கட்டிடத்தின் மேற்கூரையில் ஏற்பட்ட விரிசல் காரணமாக மழைநீர் கசிவுகளால் மேற்கூரையின் இரும்புக்கம்பிகள் துரு ஏற்பட்டு இக்கட்டிடத்தில் மிகவும் சிதிலமடைந்து உள்ளது. |

| | | |
|---|---|---|
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 19.10.2022 நாளிட்ட பரிந்துரை கடிதம் |
| 10 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண் (ம) நாள். | மன்ற தீர்மான எண். 14/2022-2023 நாள். |

எனவே, மண்டலம்-9, பகுதி-27, வார்டு-120 கஜபதி தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடம் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கும் பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சியின், கட்டிடத்துறை மூலம் புதிய சமுதாய நலக்கூடத்தின் முகப்பு வாயில் சென்னை குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது வழிப்பாதை வழியாக டாக்டர் பெசன்ட் சாலையில் அமைக்கவும், நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.149/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**<u>ம.அ.13 .நக.எண்.சி2/1782/2023</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 11.05.2023 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:293/2023** **பொருள் எண்.15**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 13 , பகுதி-40,வார்டு -169 சைதாப்பேட்டை வெங்கடாபுரத்தில் அமைந்துள்ள பழுதடைந்த சமுதாய நலக்கூடத்தை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு -169, சைதாப்பேட்டை வெங்கடாபுரத்தில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இடியும் தருவாயில் உள்ளது. கட்டிடத்தை இடித்து அவ்விடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு வார்டு குழு தீர்மான எண்.108/2023 நாள் 11.04.2023 கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்று கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பழுதடைந்த சமுதாய நலக்கூடத்தை இடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | மண்டலம்-13 | வார்டு எண் 169 |
|---|---|---|
| 1 | இடம் | சைதாப்பேட்டை, வெங்கடாபுரம், சமுதாய நலக்கூடம். |
| 2 | கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 06.09.2008 |
| 3 | கட்டிடத்தின் பரப்பளவு | 224 சதுர மீட்டர் |
| 4 | கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 868 சதுர மீட்டர் |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | 7,01,560 |
| 6 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | ஆம் |
| 7 | கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்பட உள்ளது | சமுதாய நலக்கூடம். |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 9 | வார்டு குழு தீர்மானம் எண் மற்றும் நாள். | 108/2023 நாள்.11.04.2023 |

எனவே, மண்டலம்-13, பகுதி-40, வார்டு - 169ல் சைதாப்பேட்டை வெங்கடாபுரத்தில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம் உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.144/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.13.ந.க.எண்.சி1/ 1787 /2023 (2)**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:294/2023** **பொருள் எண்.16**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 13 , பகுதி-40,வார்டு -170 கோட்டூர் புது தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த உதவி பொறியாளர் அலுவலகம் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-170 கோட்டூர், புது தெருவில் அமைந்துள்ள உதவி பொறியாளர் அலுவலகம் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இடியும் தருவாயில் உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அவ்விடத்தில் புதிய பள்ளி வளாகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு வார்டு குழு கூட்ட தீர்மான எண். 109/2023 நாள் 11.04.2023 கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்று கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பழுதடைந்த உதவி பொறியாளர் அலுவலகத்தை இடிக்க வேண்டியது அவசியமாகிறது.

கட்டிடத்தின் விவரம் வின்வருமாறு:

| வ. எண் | மண்டலம்-13 | வார்டு எண் 170 |
|---|---|---|
| 1 | இடம் | கோட்டூர், புது தெரு, உதவி பொறியாளர்அலுவலகம் |
| 2 | கட்டிடம் கட்டடப்பட்ட ஆண்டு | 1976-1977 |
| 3 | கட்டிடத்தின் பரப்பளவு | தரை தளம் -110.00m2,<br>முதல் தளம் -91.65m2<br>இரண்டாம் தளம் -91.65m2 |
| 4 | கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 12 x 11.75=141.00m2 |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | 12,144.55/- |
| 6 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | ஆம் (உதவி பொறியாளர், சுகாதார ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் அரசு இ- சேவை மையம்) |
| 7 | கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்பட உள்ளது | பள்ளி வளாகம் |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது |
| 9 | வார்டு குழு தீர்மானம் எண் மற்றும் நாள். | 109/2023 நாள்.11.04.2023 |

எனவே, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-170 கோட்டூர், புது தெருவில் அமைந்துள்ள உதவி பொறியாளர் அலுவலகம் பழுதடைந்த கட்டிடம் உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இப்பழுதடைந்த கட்டிடத்தை முழுவதுமாக இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 141/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.13.ந.க.எண்.சி1/ 1787 /2023 (3)**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:295/2023** **பொருள் எண்.17**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 13 , பகுதி-40,வார்டு -170 கோட்டூர் புது தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நூலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-170 கோட்டூர், புது தெருவில் அமைந்துள்ள நூலகம் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இடியும் தருவாயில் உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அவ்விடத்தில் புதிய பள்ளி வளாகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு வார்டு குழு கூட்ட தீர்மான எண். 109/2023 நாள்.11.04.2023 கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்று கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பழுதடைந்த நூலக கட்டடத்தை இடிக்க வேண்டியது அவசியமாகிறது.

அதன்படி,மேற்கண்ட கட்டிடங்களை பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று இடித்து அகற்ற 13வது மண்டல வார்டு குழு கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்று கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | மண்டலம்-13 | வார்டு எண் 170 |
|---|---|---|
| 1 | இடம் | கோட்டூர், புது தெரு, நூலகம் |
| 2 | கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1976-1977 |
| 3 | கட்டிடத்தின் பரப்பளவு | தரை தளம் -55.25 முதல் தளம் -55.25 |
| 4 | கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 12X9.5=114.00m2 |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | 14164.77/- |
| 6 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | ஆம். மாவட்ட கிளை நூலகம் |
| 7 | கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்பட உள்ளது | பள்ளி வளாகம் |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது |
| 9 | வார்டு குழு தீர்மானம் எண் மற்றும் நாள். | 109/2023 நாள்.11.04.2023 |

எனவே, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-170, கோட்டூர், புது தெருவில் அமைந்துள்ள பழுதடைந்த நூலக கட்டிடம் உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இப்பழுதடைந்த கட்டிடத்தை முழுவதுமாக இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.142/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.13ந.க.எண்.சி1/1787/2023 (6)**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:296/2023** **பொருள் எண்.18**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 13, பகுதி-40, வார்டு -171 காமராஜர் சாலையில் உள்ள ஆவின் பாலகம் கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-171, காமராஜர் சாலையில் உள்ளஆவின் பாலகம் கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இடியும் தருவாயில் உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அவ்விடத்தில் புதிய ஆவின் பாலகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு மண்டல வார்டு குழு தீர்மான எண்.111/2023, நாள். 11.04.2023 கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்று கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று ஆவின் பாலகம் இடிக்க வேண்டியது அவசியமாகிறது.

அதன்படி, மேற்கண்ட கட்டிடத்தை பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று இடித்து அகற்ற 13வது மண்டல வார்டு குழு எண்.111/2023 நாள் 11.04.2023 கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்று கொள்ளப்பட்டுள்ளது.
கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| வார்டு எண் | 171 |
| இடம் | காமராஜர் சாலை, ஆவின் பாலகம் |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 2001 - 2002 |
| கட்டிடத்தின் பரப்பளவு | தரை தளம் (9.6 x 3.15)+ (1.3 x 3)=34.14m2, |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 28.3 x 8.8=249.04m2 |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ஏதுமில்லை |
| கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | ஆம். ஆவின் பாலகம் |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்பட உள்ளது | ஆவின் பாலகம் |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | ஆவின் பாலகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| வார்டு குழு தீர்மானம் எண் மற்றும் நாள். | 111/2023 நாள்.11.04.2023 |

எனவே, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-171, காமராஜர் சாலையில் அமைந்துள்ள ஆவின் பாலகம் பழுதடைந்த கட்டிடம் உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இப்பழுதடைந்த கட்டிடத்தை முழுவதுமாக இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.140/2023, நாள்.23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**<u>ம.அ.13.ந.க.எண்.சி1/1787/2023 (7)</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 11.05.2023 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:297/2023** **பொருள் எண்.19**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 13 , பகுதி-40,வார்டு -171,R.A. புரம்,R.K. மடம் சாலையில் உள்ள துணை மின் நிலைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-171, R.A. புரம்,R.K. மடம் தெரு பகுதியில் துணை மின் நிலைய கட்டிடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இடியும் தருவாயில் உள்ளதால் அக்கட்டிடத்தை இடித்து அவ்விடத்தில் புதிய மின் நிலைய அலுவலகம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு 13வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.111/2023, நாள்: 11.04.2023ன்படி பரிந்துரை பெறப்பட்டுள்ளது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று பழுதடைந்த துணை மின் நிலைய கட்டிடம் இடிக்க வேண்டியது அவசியமாகிறது.

அதன்படி, மேற்கண்ட கட்டிடங்களை பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று இடித்து அகற்ற 13வது மண்டல வார்டு குழு கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்று கொள்ளப்பட்டுள்ளது.

கட்டிடத்தின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| வார்டு எண் | 171 |
| இடம் | R.A. புரம்,R.K. மடம் தெரு |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1980-1981 |
மேற்கண்ட பூங்காவிற்கு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா என்று பெயர் சூட்டுவதற்கு மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனால், தமிழக அரசின் அனுமதி பெற வேண்டி மேல் நடவடிக்கைக்காக கண்காணிப்பு பொறியாளர், பூங்காத்துறையின் 23.11.2022 நாளிட்ட கடிதம் மூலமாக கோப்பு நிலம் மற்றும் உடைமைத் துறைக்கு பெறப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40. வார்டு-173 அடையார், காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் *CRRT* திட்டத்தின் கீழ், புதியதாக அமைக்கப்பட்ட பூங்காவிற்கு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா என பெயர் சூட்டுவதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மான எண்.430/2022, நாள்.29.09.2022ன்படி, டாக்டர் கலைஞர் முகருணாநிதி பூங்கா என பெயர் சூட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும், 1919ஆம் வருடத்திய சென்னை மாநகராட்சி சட்ட பிரிவு 228ன் கீழ், மண்டலம்-13, பகுதி-40, வார்டு-173 அடையார், காந்தி நகர்,

கால்வாய்கரை சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா என்று பெயர் சூட்டுவதற்கு தமிழக அரசு அனுமதி அளித்து அரசாணை வழங்கிடுமாறு இவ்வலுவலக 09.12.2022 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசாணை(நிலை) எண்.98. ந.நி.(ம)கு.வ (மாந.6) துறை, நாள் 11.07.2022-ல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது, அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மை செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்ப வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துகளுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணையிட்டுள்ளது என்றும், இந்நிலையில், மண்டலம்-13, பகுதி-40, வார்டு-173, அடையார், காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் புதியதாக அமையவுள்ள பூங்காவிற்கு பெயரிடுவது தொடர்பாக மேற்காணும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தக்க கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு 14.02.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.

13வது மண்டல குழு தலைவர் கோரிக்கையின்படி, மண்டல அலுவலர், மண்டலம்-13, மற்றும் கண்காணிப்பு பொறியாளர், பூங்காத்துறையின் குறிப்புகளின்படி, அரசாணை(நிலை) எண்.98. ந.நி.(ம)கு.வ (மாந.6) துறை, நாள் 11.07.2022-ல் ஆணையிட்டுள்ளவாறு, 1919ஆம் வருடத்திய சென்னை மாநகராட்சி சட்ட பிரிவு 228ன் கீழ், மண்டலம்-13, பகுதி-40, வார்டு-173 அடையார், காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு **"டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா"** என்று பெயர் சூட்டுவதற்கு அரசின் அனுமதி பெற்றபின் மன்றத்தீர்மானம் நிறைவேற்றிட, அரசின் அனுமதி வழங்ககோரி, இவ்வலுவலக 27.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர் / ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-173 அடையார், காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு **" டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா "** என்று பெயர் சூட்டுவதற்கு உரிய தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர் / ஆணையருக்கு அரசால் அனுமதி அளிக்கப்பட்டு, மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, இப்பொருள் தொடர்பான உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு 27.03.2023 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98. ந.நி.(ம)கு.வ (மாந.6) துறை, நாள்.11.07.2022 பிறப்பித்த நாளுக்கு பின்னர் தான் பெருநகர சென்னை மாநகராட்சியால் தீர்மானம் எண்.430/2022, நாள்.29.09.2022

அன்று நிறைவேற்றப்பட்டுள்ளதால், இந்த தீர்மானத்தின் அடிப்படையிலேயே அடையார், காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் புதியதாக அமைக்கப்படவுள்ள பூங்காவிற்கு **“ டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா ”** என்று பெயர் வைக்க அரசாணை வழங்குமாறு 21.04.2023 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ல் தெரிவித்துள்ள அறிவுறுத்தலின்படி, அரசின் அனுமதி பெற்ற பின்னரே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து மண்டலம்-13, பகுதி-40, வார்டு-173 அடையார், காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு **“ டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா ”** என பெயர் சூட்டுவதற்கு உரிய தீர்மானத்தினை மாமன்றத்தின் முன் மீண்டும் ஒப்புதல் பெற்று உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு 02.05.2023 நாளிட்ட அரசு கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு-173 அடையார், காந்தி நகர், கால்வாய்கரை சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவிற்கு அரசாணை (நிலை) எண்.98. ந.நி.(ம)கு.வ (மாந.6) துறை, நாள் 11.07.2022-ன்படி, அரசின் அனுமதி பெறாமல் **“ டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா”** என்று பெயர் சூட்டுவதற்கு ஏற்கனவே, மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மன்றத்தீர்மான எண்.430/2022, நாள்.29.09.2022 ரத்து செய்யவும், தற்போது முதன்மைச் செயலர் / ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, அரசு அனுமதி அளிக்கப்பட்டதினால் மேற்குறிப்பிட்ட பூங்காவிற்கு **“ டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி பூங்கா”** என்று பெயர் சூட்டுவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *“26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.134/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**நி.ம.உ.துந.க.எண்.எல்இ1/1130/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 19.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:326/2023** **பொருள் எண்.48**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-6, கோட்டம்-64-ல் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் வில்லிவாக்கம் இரயில் நிலையம் அருகில் East Level Crossing L.C.1 சாலையில் - அண்ணா நகர் மற்றும் கொளத்தூர் பகுதியை இணைக்கும் வகையில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு மேயர் சிட்டிபாபு மேம்பாலம் என பெயர் சூட்ட அரசாணை பெறப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மண்டல அலுவலர், மண்டலம்-6 அவர்களின் 08.05.2023 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, வார்டு-64 கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் East Level Crossing வில்லிவாக்கம் L.C.1 சாலையில், அவ்வை நகரில் நீண்ட நாட்களாக நீர் நிலைப் பகுதியினை ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு அதனை பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் கொளத்தூர் பொதுமக்கள் அண்ணாநகர் சென்று அடைய பெரம்பூர் மற்றும் அயனாவரம் வழியாக செல்ல வேண்டிய சூழ்நிலையை அகற்றி தற்போது கொளத்தூர் வில்லிவாக்கம் L.C.1 சாலையில் ரூ. 61.98 கோடி மதிப்பீட்டில் புதியதாக இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், கொளத்தூர் பொதுமக்கள், அண்ணாநகர் சென்று வருவதற்கு பெரம்பூர் அயனாவரம் வழியாக சுமார் 5 கிலோமீட்டர் தூரம் சுற்றி சென்று வர வேண்டிய நிலைமை மாறி தற்போது இந்த மேம்பாலம் கட்டி முடித்ததால் 5 நிமிடத்தில் விரைவில் அண்ணாநகர் செல்ல ஏதுவாக மக்கள் உபயோகத்திற்காக கட்டப்பட்டது என்றும், இந்த பாலம் மக்கள் மத்தியில் நல்ல ஒரு வரவேற்புடைய திட்டமாக உள்ளது என்றும், இந்த மேம்பாலத்தின் நீளம் 480மீ மேலும் இந்த மேம்பாலத்தினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 06.05.2023 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் என்றும் இவருடன் மாண்புமிகு மேயர், முதன்மை செயலர் / ஆணையர், வட்டார துணை ஆணையர், தலைமை பொறியாளர் மற்றும் வார்டு குழு தலைவர் , மண்டல அலுவலர்-6, அவர்கள் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்களும் மேம்பாலத்தினை பார்வையிட்டு, விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்கு வரவுள்ள இந்த மேம்பாலத்திற்கு புதியதாக பெயர் சூட்ட வேண்டுமென்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, கொளத்தூர் வில்லிவாக்கம் L.C.1 சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்திற்கு **" மேயர் சிட்டிபாபு (MAYOR CHITTIBABU ) மேம்பாலம்"** என பெயர் சூட்ட அரசாணை பெற முதன்மைச் செயலர்/ ஆணையர் அவர்கள் மூலம், அரசிற்கு பரிந்துரை கடிதம் அனுப்ப மேல்நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்ப வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துகளுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, கோட்டம்-*64*ல் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் *East Level Crossing* வில்லிவாக்கம் *L.C.1* சாலையில், அவ்வை நகரில் நீண்ட நாட்களாக நீர் நிலைப்பகுதியின் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு அதனை பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் கொளத்தூர் பொதுமக்கள் அண்ணாநகர் சென்று அடைய பெரம்பூர் மற்றும் அயனாவரம் வழியாக செல்ல வேண்டிய சூழ்நிலையை அகற்றி தற்போது கொளத்தூர் வில்லிவாக்கம் *L.C.1* சாலையில் ரூ. *61.98* கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு **“ மேயர் சிட்டிபாபு *(MAYOR CHITTIBABU )* மேம்பாலம் ”** என பெயர் சூட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறப்பு விழா மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதால், அவசரம் மற்றும் அவசியம் கருதி, இது குறித்து உரிய அரசாணை வெளியிடுமாறும், மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி, மாமன்றத்தில் பின்னேற்பு தீர்மானம் நிறைவேற்றிட அனுமதி வழங்குமாறும் கோரி மாண்புமிகு மேயர் அவர்களின் 08.05.2023 நாளிட்ட ஒப்புதலுடன் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

அரசாணை (4ப) எண்.17, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.12.05.2023ல், முதன்மை செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், இந்நேர்வினை சிறப்பினமாக கருதி, அரசாணையில் உள்ள நிபந்தனைகளுக்கு விலக்களித்து, மண்டலம்-6 கோட்டம்-64ல் கொளத்தூர் வில்லிவாக்கம் அருகில் கிழக்கு சந்திக் கடவு *(East Level Crossing*-1) சாலையில் ரூ.61.98 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு **“மேயர் சிட்டிபாபு *(MAYOR CHITTIBABU)* மேம்பாலம்”** என பெயர் சூட்ட பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6 கோட்டம்-64ல் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில், வில்லிவாக்கம் இரயில் நிலையம் அருகில் *East Level Crossing L.C.1* சாலையில் அண்ணா நகர் மற்றும் கொளத்தூர் பகுதியும் இணைக்கும் வகையில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு **“மேயர் சிட்டிபாபு *(MAYOR CHITTIBABU)* மேம்பாலம்”** என பெயர் சூட்ட அரசாணை பெறப்பட்டதனை தொடர்ந்து, மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *“26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.135/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*”.*

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.**

**********

**க.து.ந.க.எண்.அ1/5117/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 23.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:327/2023** **பொருள் எண்.49**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை - சென்னை உயர் (ம) மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை நான்கு குழுக்களாக பிரித்து நான்கு வண்ண -T-Shirt வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக சம்மந்தப்பட்ட நான்கு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள The Tamilnadu Textile Corporation Ltd. நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய அனுமதி.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். 21ன் படி 2023-2024ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களை நான்கு குழுக்களாக பிரித்து அக்குழுக்களுக்கு அரக்கு, பச்சை, மஞ்சள், ஊதா ஆகிய நான்கு வண்ணங்களில் ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டில் T-Shirt கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக சென்னைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கும் மற்றும் அரசாணை(நிலை)எண். 48, பள்ளிக் கல்வித் (ப.க.5(2)) துறை, நாள்: 01.03.2023ன் படி, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் நிர்வாக மாற்றம் செய்யப்படும் திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் சென்னை மாவட்டத்தில் ஒரு பள்ளி உட்பட பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் அடங்கியுள்ள 8 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 3 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களையும் உட்படுத்தி 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 81 பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கும் T-Shirt வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட நான்கு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. நிறுவனங்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விவரம் கீழ்வருமாறு:

| S. No. | Description | Quotation Rate in Rupees | | | |
|---|---|---|---|---|---|
| | | Jai Sports Garments | Rishab Fabrics and Garments | Shrri Sanju Fashion | Tamilnadu Textile Corporation Ltd. |
| 1 | Lacoste Sportswear T-shirt size M & L | 220.50 (inclusive all taxes) | 218.40 (inclusive all taxes) | 215.25 (inclusive all taxes) | 207.90 [including GST] |
| 2 | Lacoste Sportswear T-shirt size XL & XXL | 225.75 (inclusive all taxes) | 223.65 (inclusive all taxes) | 222.60 (inclusive all taxes) | 217.35 [including GST] |

மேற்கண்டுள்ள நான்கு நிறுவனங்களின் விலைப்புள்ளியினை ஒப்பிட்டுப் பார்த்ததில் அரசு நிறுவனமான The Tamilnadu Textile Corporation Ltd. நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளது. தமிழ்நாடு ஒப்பந்த விதிகள் 1998 (Tamilnadu Transparency in Tender Act-1998) Rule 16(f)ன் படி, அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பொருட்களுக்கு ஒப்பந்த நடவடிக்கைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட அரசு நிறுவனமான The Tamilnadu Textile Corporation Ltd. நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியின் படி 81 சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களின் அளவிற்கேற்றவாறு விலை விவரம் கீழ்வருமாறு:

| வ. எண். | மாணவர்களின் அளவு விவரம் | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு *T.Shirt*ன் விலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | M & L | 16,146 | **207.90** [including GST] | 33,56,753.40 |
| 2 | XL & XXL | 13,112 | **217.35** [including GST] | 28,49,893.20 |
| **மொத்தம்** | | | | **62,06,646.60** **+*.40*** **ரூ.62,06,647.00** |

எனவே, மேற்குறிப்பிட்ட விவரங்களின் அடிப்படையில் 81 சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் *9*ஆம் வகுப்பு முதல் *12*ஆம் வகுப்பு வரை பயிலும் 29,258 மாணவ / மாணவியர்களுக்கு *T-Shirt* வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு நிறுவனமான The Tamilnadu Textile Corporation Ltd. நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மாண்புமிகு மேயர் அவர்களின் *2023-2024*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். *21*ன் படி *2023-2024*ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் *9*ஆம் வகுப்பு முதல் *12*ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களை குறிஞ்சி, முல்லை, மருதம் மற்றும் நெய்தல் என நான்கு குழுக்களாக பிரித்து அக்குழுக்களுக்கு முறையே அரக்கு, பச்சை, மஞ்சள், ஊதா ஆகிய நான்கு வண்ணங்களில் *T-Shirt* கொள்முதல் செய்து வழங்குவதற்கு அனுமதியும்,

2. மேற்குறிப்பிட்ட மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட உள்ள *T-Shirt*களை குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள அரசு நிறுவனமான The Tamilnadu Textile Corporation Ltd. நிறுவனம் மூலம் ரூ.62,06,647/- (ரூபாய் அறுபத்து இரண்டு இலட்சத்து ஆறாயிரத்து அறுநூற்று நாற்பத்து ஏழு மட்டும்) தொகையில் கொள்முதல் செய்து வழங்குவதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்ட செலவினத் தொகையினை கணக்கு குறியீட்டு எண். 80-82-01, 230-11-02-02 *(Education Expenses)* என்ற நிதி ஒதுக்கீட்டிலிருந்து செலவு மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**க.து.ந.க.எண்.அ1/4920/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:328/2023** **பொருள் எண்.50**

**பெருநகர சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – 2023-2024ஆம் கல்வியாண்டில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின் படி சென்னைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக சம்மந்தப்பட்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டு அதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர். *The Sruthilaya* என்ற நிறுவனத்தின் மூலம் இசைக்கருவிகள் கொள்முதல் செய்ய அனுமதி.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். 5ன் படி 2023-2024ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் உள்ள 20 பள்ளிகளுக்கு ஸ்ருதி பெட்டி (Manual), மின்கலன்களால் இயக்கப்படும் ஸ்ருதி பெட்டி (Electronic), ஆர்மோனியம், தாளம் மற்றும் மராக்கஸ் குச்சிகள் (Maracas) போன்ற இசைக்கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக சென்னைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் உள்ள 20 பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் வழங்குவதற்கு கல்வி அலுவலர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு சம்மந்தப்பட்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு:

| S.No. | Description | Qty | Rate in rupees | | |
|---|---|---|---|---|---|
| | | | Saraswathi Musicals & Traders | New Grace Musicals | The Sruthilaya |
| 1 | Radel thambura sruthi box maestro | 16 nos | 1,08,000 | 97,200 | 78,711.88 |
| 2 | Jalra 2 inch | 16 nos | 4,800 | 5,600 | 3,200.00 |
| 3 | Kapass | 16 nos | 8,800 | 8,800 | 6,101.76 |
| 4 | Morocos | 16 nos | 9,600 | 3,200 | 8,000.00 |
| 5 | Yamaha e 373 keyboard | 1 no. | 15,500 | 15,705 | 11,822.03 |
| 6 | Joint veena only | 4 nos. | 1,16,000 | 1,28,000 | 1,00,000.00 |
| 7 | Tambourin 9 inch | 22 nos. | 9,900 | 6,600 | 7,700.00 |
| 8 | Violin set Indian | 1 no. | 5,200 | 4,850 | 3,600.00 |
| 9 | Trumpet | 22 nos. | 1,54,000 | 1,28,700 | 1,30,900 |
| 10 | Drum 24 size | 22 nos. | 1,49,600 | 1,27,600 | 1,32,550.00 |
| **TOTAL** | | | **5,81,400** | **5,26,255** | **4,99,980.00** (with GST included) |

மேற்கண்டுள்ள மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளியினை ஒப்பிட்டுப் பார்த்ததில் M/S The Sruthilaya என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைந்து காணப்படுவதால், அந்நிறுவனத்திடமிருந்து ரூ.4,99,980/- தொகை செலவில் 20 சென்னைப் பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் கொள்முதல் செய்து வழங்குவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மாண்புமிகு மேயர் அவர்களின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். 5ன் படி 2023-2024ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் உள்ள 20 பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்குவதற்கு அனுமதியும்,

2. மேற்குறிப்பிட்ட இசைக் கருவிகளினை குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனமான *M/S The Sruthilaya* என்ற நிறுவனத்தின் மூலம் ரூ.*4,99,980/-* தொகை செலவில் *20* சென்னைப் பள்ளிகளுக்கு இசைக்கருவிகள் கொள்முதல் செய்து வழங்குவதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்ட செலவினத் தொகையினை *M/S The Sruthilaya* என்ற நிறுவனத்திற்கு காசோலையாக கணக்கு குறியீட்டு எண். *80-82-01, 230-11-01-01 (Education Expenses – Special Class Expenses)* என்ற நிதி ஒதுக்கீட்டிலிருந்து செலவு மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"*17.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தின் தீர்மான எண். *29/2023*, நாள்.*17.05.2023* -ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"*26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.137/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ3.ந.க.எண்.சி1/2296 /2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 10.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:329/2023** **பொருள் எண்.51**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 மாதவரம் - பகுதி - 6, 7 மற்றும் - 8 - விரிவாக்கப்பட்ட பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட சாலை பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் NULM பணியாளர்களின் பணிக்காலம் 31.05.2023 உடன் முடிவடைகிறது - 01.06.2023 முதல் 31.05.2024 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியாளர்களை பணியமர்த்த அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம்-3ல் பகுதி-6,7, மற்றும் 8 வார்டு-23 முதல் 33 வரை 40.55 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 12 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 13 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2549 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் முக்கியமான தெருக்களை தவிர அனைத்து தெருக்களிலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அவசரம் கருதி ஆணையர் அவர்களின் 29/07/2016 நாளிட்ட குறிப்பின் படியும் , மன்றத் தீர்மான எண் 181/2022 நாள்.28.06.2022, மற்றும் வார்டு குழு தீர்மான எண் 461, நாள்.10.03.2023ன்படியும், தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) தற்காலிக பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-3, வார்டு 23 முதல் 33 வரை 11 வார்டுகளில் அனைத்து களப்பணிகளையும் திறம்பட மேற்கொள்ள ஏற்கனவே பணிபுரிந்து வரும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதிய துப்புரவு பணியாளர்களை தவிர்த்து துப்புரவு பணிக்கு 521 பணியாளர்கள், சாலை பணிக்கு 94 பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணிக்கு 44 பணியாளர்கள் மற்றும் பூங்கா பணிகள் மேற்கொள்ள 12 பணியாளர்கள் என கூடுதலாக 671 தற்காலிக (NULM) பணியாளர்களை பணி அமர்த்தி அனைத்து பணிகளையும் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வந்தது. 27-02-2021 முதல் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின்படி 521 தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 28-02-2021 உடன் நிறைவடைந்ததால். மேற்படி 521 துப்புரவு பணியாளர்கள் தவிர்த்து சாலைப்பணியாளர்கள், மழைநீர் வடிகால் பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், போன்றவர்களின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு சாலைப்பணியாளர்கள் 49, மழைநீர் வடிகால் பணியாளர்கள் 41, பூங்கா பணியாளர்கள் 11 என மொத்தம் 101 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். இவர்களை NULM திட்டத்தின் கீழ் பணி அம்ர்த்தலாம் என்று முடிவு செய்து கடந்த 10.03.2023 நாளிட்ட வார்டுகுழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ROC. C2/16317/2021 நாள்:06.06.2022.ல் வரிசை எண்.64ன் படி, பணியமர்த்தப்படும் சாலை பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் பணி, பூங்கா பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.424/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், மன்ற தீர்மான எண் . 181/2022 நாள் : 28.06.2022 ன்படியும் தேசிய நகர்புற வாழ்தார இயக்கம் மூலம் (NULM) 57 சாலை பணியாளர்கள், 44 மழை நீர் வடிகால் வாய் பணியாளர்கள் மற்றும் 12 பூங்கா பணியாளர்கள் என மொத்தம் 113 தற்காலிக பணியாளர்களை மண்டலம்-3 (மாதவரம்) பகுதி 6, 7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பராமரிப்பு பணி, மழை நீர் வடிகால் வாய் பணி, பூங்கா பராமரிப்பு பணிகளை 01.06.2023 முதல் 31.05.2024 வரை பணியமர்த்தி கொள்ள மன்ற தீர்மானம் பெறப்பட்டது. தற்போது மேலும், இப்பணிகளை மேற்கொள்ள ஒரு வருட

காலத்திற்கு அதாவது 01-06-2023 முதல் 31.05.2024 வரை (366 நாட்களுக்கு) பணியமர்த்தப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3ல் வார்டுகள் வரன்முறைபடுத்தப்பட்டபோது மண்டலம்-3ல் பழைய வார்டு-29 புதிய வார்டு-22 ஆக மாற்றம் செய்யப்பட்டு மண்டலம்-2ல் சேர்க்கப்பட்டுள்ளது. மண்டலம்-3ல் 12 வார்டுகளாக இருந்த வார்டுகள் தற்போது 11 வார்டுகளாக மாற்றப்பட்டுள்ளது. வார்டு-1க்கு 8 நபர்கள் வீதம் 11 வார்டுகளுக்கு 88 சாலைப்பணியாளர்களும், மழைநீர் வடிகால்வாய் பணியாளர்களில் 44 நபர்களில் 3 நபர்கள் மண்டலம்-2ல் ஒப்படைப்பு செய்யப்பட்டது போக மீதம் 41 நபர்களும், பூங்கா பணியாளர்கள் 12 நபர்களில் 1 நபர் ஒப்படைப்பு செய்யபட்டது போக 11 நபர்களுக்கு 01.06.2023 முதல் 31.05.2024 வரை ஒரு ஆண்டுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், தற்போது வார்டு-1க்கு 8 நபர்கள் வீதம் 11 வார்டுகளுக்கு 88 நபர்களில் பணிகள் மேற்கொள்ள அவசியமானது. இதில் மண்டலம்-3ல் 39 சாலைப்பணியாளர்கள் பணிமாற்று அடிப்படையில் தலைமையிடத்திலும் மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பணிபுரிந்து வருகின்ற நிரந்தர சாலை பணியாளர்கள் 39 நபர்களுக்கு பதிலாக NULM மூலம் 39 பணியாளர்கள் பணியமர்த்தி கொள்ள கோப்பு இரண்டாக பிரிக்கப்பட்டு 01.06.2022 முதல் 31.05.2023 வரை ஒரு வருடத்திற்கு ஆணை பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியளார் விவரம் | | NULM பணியளார் | மண்டலம்-2க்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட நபர்கள் | மொத்த NULM பணிளார்கள் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | சாலை பணியளார் | நிரந்திர பணியாளர்கள் 39 நபர் பணிமாற்று அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள் | 57 | 8 | 49 | (49x424x366) ரூ. 76,04,016/- |
| 2 | மழைநீர் வடிகால்வாய் பணியாளர் | - | 44 | 3 | 41 | (41x424x366) ரூ. 63,62,544/- |
| 3 | பூங்கா பணியாளர் | - | 12 | 1 | 11 | (11x424x366) ரூ. 17,07,024/- |
| | | | | | **101** | **ரூ.1,56,73,584/-** |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, 49 சாலை பணியாளர்களுக்கு ரூ. 76,04,016/-வும், மழைநீர் வடிகால்வாய் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 41 பணியாளர்களுக்கு ரூ. 63,62,544/-ம் 11 பூங்கா பணியாளர்களுக்கு ரூ. 17,07,024/-ம் ஆக மொத்தம் 366 நாட்களுக்கு ரூ. 1,56,73,584/- தோராய செலவு என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பணிக்காக கணக்கு தலைப்பு எண். 20-21-07 கணக்கு குறியீட்டு எண் . 210-100-603ன் கீழ் 2023-24-ஆம் நிதியாண்டிற்கு ரூ.2,50,00,000/- நிதி ஒதுக்கப்பட்டு தற்போது ரூ.5,95,296/- செலவிடப்பட்டது போக மீதம் ரூ.2,44,04,704/- இருப்பில் உள்ளது.

எனவே ,

1. மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 49 சாலை பணியாளர்கள், 41 மழைநீர் வடிகால்வாய் பணியாளர்கள் மற்றும் 11 பூங்கா பணியாளர்கள் ஆக மொத்தம் 101 பணியாளர்களை மண்டலம்-3(மாதவரம்), பகுதி 6,7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை

பராமரிப்பு பணி, மழைநீர் கால்வாய் பணி மற்றும் பூங்கா பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்கு 01.06.2023 முதல் 31.05.2024 வரை 366 நாட்களுக்கு பணியமர்த்தவும், 01.06.2023 அன்று முதல் அவசியத்தின் அடிப்படையில் இப்பணியை நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான (101 பணியாளர்கள்) குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக ரூ. 424/- வீதம் 101 பணியாளர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு (366 நாட்கள்) ஆகும் செலவுத் தொகை 424 x 101 x 366 நாட்கள் = ரூ. 1,56,73,584/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து ஐநூற்று எண்பத்தி நான்கு மட்டும்) ஆகும். இதற்கு மாமன்றத்தின் அனுமதி பெறவும், எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 145 /2023, நாள். 23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.139/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ3.ந.க.எண்.சி1/2297/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:330/2023** **பொருள் எண்.52**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 மாதவரம் - பகுதி - 6, 7 மற்றும் - 8 - விரிவாக்கப்பட்ட பகுதியில் நிரந்தர சாலை பணியாளர்கள் 39 நபர்கள் - தலைமை அலுவலகத்தில் அயற் பணியில் 16 நபர்களும், மண்டலம் மற்றும் வார்டு அலுவலகத்தில் 11 பேரும் உதவி / இளநிலை பொறியாளர்களுக்கு 12 பேரும் பணிபுரிகின்றனர் - அவர்களுக்கு பதிலாக 39 நபர்கள் 01.06.2023 முதல் 31.05.2024 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் பணியாளர்களை பணியமர்த்தஅனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம்-3ல் பகுதி-6,7, மற்றும் 8 வார்டு-23 முதல் 33 வரை 40.55 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 12 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும் . இந்த மண்டலத்தில் 13 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2549 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு அனைத்து சாலை பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் முக்கியமான தெருக்களை தவிர அனைத்து தெருக்களிலும் சாலை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அவசரம் மற்றும் அவசியம் கருதி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தற்காலிக பணியாளர்களை நியமனம் செய்திடவும், மண்டலம் 3ல் பணிபுரியும் 39 பணியாளர்களில் பணிமாற்று அடிப்படையில் 16 நபர்கள் தலைமையிடத்தில் வெவ்வேறு துறையில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், 11 நபர்கள் வார்டு அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் 23 முதல் 33 வரை பணிபுரியவும், உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளருக்கு உதவியாளராக வார்டு ஒன்று வீதம் 12 நபர்கள் பணியாமர்த்துவது அவசியமாகிறது.

மண்டலம் 3ல் உள்ள 39 சாலை பணியாளர்களும் வெவ்வேறு தலைமையிடம் துறை மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிந்து வருகின்றனர். இதனால் மண்டலம் 3ல் உள்ள சாலை பணியாளர்கள் கவனித்து வந்த பணிகள் மேற்கொள்ள NULMல் தினக்கூலி அடிப்படையில் 39 சாலை பணியாளர்களுக்கு 01.06.2022 முதல் 31.05.2023 வரை முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 31.05.2022 நாளிட்ட அனுமதி மற்றும் மன்ற தீர்மான எண். 182/2022 நாள் 28.06.2022ன்படி ஆணை பெறப்பட்டது.

எனவே, தற்போது மண்டலம் 3ல் சாலை பராமரிப்பு பணியாளர்கள் அவசர அவசியம் கருதியும் பணிகள் தொய்வின்றி சிறப்பாக நடைப்பெறவும் தினக்கூலி அடிப்படையில் 39 பணியாளர்களை NULM மூலம் நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் ஒரு வருட காலத்திற்கு 01.06.2023 முதல் 31.05.2024 வரை பணிகள் மேற்கொள்ள அவசியமாகிறது. இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -3ல் 10.03.2023 நாளிட்ட வார்டு குழு கூட்டத்தில் பொருள் எண்.31-ன் படி பணியமர்த்திகொள்ள தீர்மானம் நிறைவேற்றபட்டது.

அட்டவணை - 1

| வ. எண் | மாற்று பணி அடிப்படையில் தலைமையிடத்தில் பணிப்புரியும் பணியாளர்களின் விவரம் | வார்டு 23 முதல் 33 வரை உள்ள இளைநிலை பொறியாளர்களுக்கு உதவியாக பணிப்புரியும் பணியாளர்களின் விவரம் | வார்டு (ம) மண்டலம் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 16 நபர்கள் | 12 நபர்கள் | 11 நபர்கள் | 39 |

<u>அட்டவணை - 2</u>

| வ. எண் | தேவைப்படும் பணியாளர் விவரம் | தற்போது தேவைப்படும் NULM பணியாளர்கள் | தொகை |
|---|---|---|---|
| 1 | சாலை பணியாளர் | 39 | (39x424x366) Rs. 60,52,176/- |
| | மொத்தம் | **39** | Rs. 60,52,176/- |

எனவே,

1. மண்டலம்-3ல் NULM மூலம் 39 பணியாளர்களும் மண்டலம் அலுவலகம் மற்றும் வார்டு அலுவலகம் 23 முதல் 33 வரையும் உதவி இளநிலை பொறியாளர்களுக்கு உதவியாளராகவும் தலைமை அலுவலகத்திற்கு அயற்பணிகளுக்காகவும் பணியமர்த்த வேண்டியும்,
2. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான (39 பணியாளர்கள்) குறைந்தபட்ச ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ. 424/- வீதம் 39 பணியாளர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு ( 366 நாட்கள் ) ஆகும் செலவுத் தொகை 424 X 39 X 366 நாட்கள் = ரூ. 60,52,176/- ( ரூபாய் அறுபது இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து நூற்றி எழுபத்தாறு மட்டும்) ஆகும். இதற்கு மாமன்றத்தின் அனுமதி பெறவும், எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,'
3. இப்பணிக்கான மொத்த செலவின தொகை ரூ. 60,52,176/- ஒரு வருட காலத்திற்கு ஊதியம் வழங்கவும்,

| வ.எண் | கணக்கு குறியீட்டு எண் | கணக்கு தலைப்பு எண் | தேவைப்படும் தொகை |
|---|---|---|---|
| 1 | 20-21-07 | 210-100-603 | ரூ. 60,52,176 |

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 146 /2023, நாள். 23.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.140/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.7.ந.க.எண்.எஸ்3/0358/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:331/2023** **பொருள் எண்.53**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-18, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம்15.04.2023 உடன் முடிவடைவது - 413 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை கொண்டு 16.04.2023 முதல்15.10.2023 வரை 183 நாட்களுக்கு பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 3,77,89,500/-க்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி–18, வார்டு–79 முதல் வார்டு–83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி–18ன்கீழ் உள்ள 79 முதல் 83 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,56,255 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி–18, 19, 20ல், 79 முதல் 93 வரையிலான 15 வார்டுகளில் தோராயமாக 335 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி–18ல் (வார்டு–79 முதல் 81 வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது,

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு, வார்டு 82, 83 மற்றும் 85இல் பணி ஆணை வழங்கப்பட்டது. இதில் மேற்கண்ட நிறுவனம் மூலம் பகுதி-18இல் வார்டுகள் 82 & 83 இல் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மீதமுள்ள 3 வார்டுகளில் துப்புரவு பணிகளை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பகுதி – 18 ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | - | 147 |
| 2) | பகுதி–18ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | - | 413 |
| | மொத்தம் | - | 560 |

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியம் உள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்றத் தீர்மான எண்.603/2022, நாள்.29.11.2022-ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு 79, 80, 81இல் 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.10.2022 முதல் 15.04.2023 வரை 182 நாட்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இப்பணியானது 15.04.2023 இல் நிறைவடைய உள்ளதால், மண்டலம்-7, பகுதி–18ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 560 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 147 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 413 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7, பகுதி-18க்கு தேவை என கணக்கிட்டு அவசியம் கருதி 16.04.2023 முதல் 15.10.2023 வரையில் ஆறுமாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 18 | 413 | ரூ.500x413x183(நாட்கள்) = ரூ. 3,77,89,500/- |
| மொத்தம் | | | ரூ. 3,77,89,500/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், 24.01.2023 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மைதுறை சம்மந்தமான சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 413 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.3,77,89,500/- (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தேழு இலட்சத்து எண்பத்தொன்பது ஆயிரத்து ஐநூறு மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7 அம்பத்தூர், பகுதி-18ல் 16.04.2023 முதல் 15.10.2023 வரை 6 மாதங்கள் Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 3 வார்டுகளை எடுத்து (Take Over) துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever is Earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் அதே 413 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

2) மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம், ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.3,77,89,500/- (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தேழு இலட்சத்து எண்பத்தொன்பது ஆயிரத்து ஐநூறு மட்டும்) நிர்வாக அனுமதிவேண்டியும்,

3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண். 40 - 41– 03, கணக்கு தலைப்பு எண். 210 –10 – 06 – 01 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இவ்வினத்தில் மண்டல அலுவலர் அவர்களின் ம.அ.7./ப.18/*S3/3622/2023*, 17.05.2023 நாளிட்ட குறிப்பில் மே மாத விடுமுறைக்கு பின்பு, அடுத்து வருகின்ற நீதிமன்ற விசாரணையின் *(Next Hearing)* அடிப்படையில், மண்டலம்-7ல் பணிபுரியும் 60 வயதுக்கு மேற்பட்ட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க *(NULM)* பணியாளர்களை, பணியிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கலாம் என, முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட குறிப்பின்படி 60 வயது கடந்த துப்புரவு பணியாளர்களை பணியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மற்ற துப்புரவு பணியாளர்கள் தொடர்ந்து 183 நாட்களுக்கு துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு 19.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.047/2023, நாள்.19.05.2023-ன்படி இதனை நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"*26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.142/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.7.ந.க.எண்.எஸ்2/0334/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:332/2023** **பொருள் எண்.54**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி-19, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.04.2023 உடன் முடிவடைவது - 485 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.04.2023 முதல் 15.10.2023 வரை (183 நாட்களுக்கு) பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4,43,77,500/-க்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி-19, வார்டு–84 முதல் வார்டு–88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி- 19ன் கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி–19ல் 84 முதல் 88 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 94.190 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

மேலும் வார்டு மறு சீரமைப்பின் படி கோட்டம்–92 லிருந்து கோட்டம்-86ல் புதியதாக சேர்க்கப்பட்ட இடங்களில் பணிப்புரிந்து வந்த 92 வது கோட்டத்தை சார்ந்த 4 பணியாளர்கள் 86வது கோட்டத்தில் பணியமர்த்தப்பட்டு பணிப்புரிந்து வருவதனை தொடர்ந்து ஏற்கனவே பணிபுரியும் 168 பணியாளர்களுடன் ஒட்டு மொத்தம் 172 பணியாளர்களுக்கும் 86வது கோட்டத்திலேயே ஊதியம் வழங்கப்பட்டு வருவதனை தொடர்ந்து, இக்கருத்துக்களின் அடிப்படையில் 481 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு பதிலாக 485 எண்ணிக்கையில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே, தற்போது பகுதி-19ல் (வார்டு-84 முதல் 88 வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைதுறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு வார்டு 82, 83 & 85ல் பணிஆணை வழங்கப்பட்டது. இதில் மேற்கண்ட நிறுவனம் மூலம் பகுதி 19 இல் வார்டு 85 இல் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 வார்டுகளில் துப்புரவு பணிகளை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பகுதி–19ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | - | **83** |
| 2) | பகுதி–19ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | - | **485** |
| | மொத்தம் | - | **568** |

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியம் உள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்: 604/2022, நாள்.29.11.2022-ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு 84, 86, 87 மற்றும் 88-இல் 481 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.10.2022 முதல் 15.04.2023 வரை 182 நாட்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.04.2023ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி-19ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 568 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 83 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 485 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7, பகுதி-19க்கு தேவை என கணக்கிட்டு 16.04.2023 முதல் 15.10.2023 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 19 | 485 | ரூ.500x485x183(நாட்கள்) = ரூ.4,43,77,500/- |
| மொத்தம் | | | ரூ.4,43,77,500/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின், 24.01.2023 நாளிட்ட சுற்றறிக்கையின்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 485 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.4,43,77,500/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7 அம்பத்தூர், பகுதி-19ல் 16.04.2023 முதல் 15.10.2023 வரை 6 மாதங்கள் அல்லது Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 4 வார்டுகளை எடுத்து (Take Over) செய்து துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever is Earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் 485 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

2) மேற்கண்ட 485 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம், ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.4,43,77,500/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐநூறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 210 - 10 - 06 - 01 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட, *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"இவ்வினத்தில் மண்டல அலுவலர் அவர்களின் ம.அ.7./ப.18/*S3/3622/2023*, 17.05.2023 நாளிட்ட குறிப்பில் மே மாத விடுமுறைக்கு பின்பு, அடுத்து வருகின்ற நீதிமன்ற விசாரணையின் *(Next Hearing)* அடிப்படையில், மண்டலம்-7ல் பணிபுரியும் 60 வயதுக்கு மேற்பட்ட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க *(NULM)* பணியாளர்களை, பணியிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கலாம் என, முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட குறிப்பின்படி 60 வயது கடந்த துப்புரவு பணியாளர்களை பணியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மற்ற துப்புரவு பணியாளர்கள் தொடர்ந்து 183 நாட்களுக்கு துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு *19*.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.046/2023, நாள்.19.05.2023-ன்படி இதனை நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"*26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.141/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ7ந.க.எண்.எஸ்1/ 00265 /2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண் : 333 / 2023** **பொருள் எண்.55**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.04.2023 உடன் முடிவடைவது - 559 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை கொண்டு 16.04.2023 முதல் 15.10.2023 வரை (183 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 5,11,48,500/- (ரூபாய் ஐந்து கோடியே பதினோரு இலட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரத்து ஐநூறு மட்டும்)க்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி-20, வார்டு-89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,59,438 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி-20ல் (வார்டு - 89 முதல் 93 வரை) நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் NULM பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், வார்டு மறு சீரமைப்பின்படி கோட்டம்-92 லிருந்து கோட்டம்-86க்கு 4 பணியாளர்களை, பணியமர்த்தியதை தொடர்ந்து வார்டு-92ல் ஏற்கனவே பணிபுரிந்த 114 பணியாளர்களில் இந்த 4 பணியாளர்கள் தவிர்த்து, தற்போது பணிபுரியும் 110 பணியாளர்களுக்கு கோட்டம்-92லேயே ஊதியம் வழங்கப்பட்டு வருவதனை தொடர்ந்து, இக்கருத்துக்களின் அடிப்படையில் பகுதி-20ல் 563 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு பதிலாக 559 எண்ணிக்கையில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே பகுதி-20 (வார்டு-89 முதல் 93 வரையில்) துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட NULM பணியாளர்களை 16.04.2023 முதல் 15.10.2023 வரை (183 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

பகுதி **- 20** ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-5**59**.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியம் உள்ளதால் அதற்கேற்ப தற்காலிக NULM பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்.605/2022, நாள்.29.11.2022-ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் கீழ் (NULM) 563 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.10.2022 முதல் 15.04.2023 வரை ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.04.2023-ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி-20ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 183 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

இக்கருத்துக்களின் அடிப்படையில் 559 துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு தேவை என கணக்கிட்டு 16.04.2023 முதல் 15.10.2023 வரை (183 நாட்களுக்கு) ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 20 | 559 | ரூ.500 x 559 x 183 (நாட்கள்) = **ரூ**. 5,11,48,500./- |
| **மொத்தம்** | | | **ரூ**. 5,11,48,500./- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், 24.01.2023 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 559 பணியாளர்களுக்கு 16.04.2023 முதல் 15.10.2023 வரை (183 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.5,11,48,500./- (ரூபாய் ஐந்து கோடியே பதினோரு இலட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரத்து ஐநூறு மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1 பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் **-7**, பகுதி **- 20**ல் (வார்டு – 89 முதல் 93 வரை) 16.04.2023 முதல் 15.10.2023 வரை (183 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம்–7ல் குப்பைகளை அகற்ற Chennai Enviro Solution private Limited மூலம் 5 வார்டுகளை எடுத்து (Takeover) துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever is earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க (NULM) 559 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

2 மேற்கண்ட 559 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம், 16.04.2023 முதல் 15.10.2023 வரை 183 நாட்களுக்கு ஆகும் செலவு **ரூ. 5,11,48,500/-** (ரூபாய் ஐந்து கோடியே பதினோரு இலட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரத்து ஐநூறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

3 இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண். 210 -100 -601 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“இவ்வினத்தில் மண்டல அலுவலர் அவர்களின் ம.அ.7./ப.18/*S3/3622/2023, 17.05.2023* நாளிட்ட குறிப்பில் மே மாத விடுமுறைக்கு பின்பு, அடுத்து வருகின்ற நீதிமன்ற விசாரணையின் *(Next Hearing)* அடிப்படையில், மண்டலம்-7ல் பணிபுரியும் 60 வயதுக்கு மேற்பட்ட தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க *(NULM)* பணியாளர்களை, பணியிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கலாம் என, முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட குறிப்பின்படி 60 வயது கடந்த துப்புரவு பணியாளர்களை பணியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மற்ற துப்புரவு பணியாளர்கள் தொடர்ந்து 183 நாட்களுக்கு துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு 19.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.048/2023, நாள்.19.05.2023-ன்படி இதனை நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“*26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.143/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.11ந.க.எண்.E3/392/2023**

**கூடுதல் தலைமைச் செயலர் / ஆணையர் அவர்களின் 20.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:334/2023** **பொருள் எண்.56**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11, பகுதி-32, 33 (ம) 34, கோட்டம் -143 முதல் 155 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் 01.06.2023 முதல் 30.04.2024 வரை பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்த நிர்வாக அனுமதி**

Municipal Administration and Water Supply (Ma.IV) Department, G.O. (MS) No.166, dated 23.11.2016ல், அந்தந்த உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியர்கள் PTA நிதியிலிருந்து பெற்று வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணைஆணையர் (கல்வி) அவர்களின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு தெற்கு வட்டார மண்டலங்களான 11 முதல் 15 வரையிலுள்ள சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளுக்கு தனியார் நிறுவனத்தின் மூலம் துப்புரவு பணி மேற்கொள்வதை தவிர்த்து வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளப்படி வழிமுறைகளை பின்பற்றி தேவையான பணியாளர்களை கணக்கிட்டு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டுகுழு திட்டத்தின் மூலம் பணியாளர்களை பணியமர்த்தி பணியை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 2021 ஆம் ஆண்டு சென்னை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விகிதத்தில் சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுபுறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்யும் பணிக்கு 20 பள்ளிகளில் வகுப்பறைகளை மட்டும் சுத்தம் செய்ய 19 பணியாளர்கள் மற்றும் கழிவறைகளை மட்டும் சுத்தம் செய்ய 15 பணியாளர்கள் மற்றும் வகுப்பறை மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய 6 பணியாளர்களும் என மொத்தம் 40 தற்காலிக தினக்கூலி பணியாளர்களும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் தினக்கூலி பணியில் எடுக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.360/2021, நாள்.26.02.2021ன்படி மண்டலம் 11க்குட்பட்ட சென்னை மாநகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுபுறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய மன்றத் தீர்மானம் மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட பள்ளிகளில் 19.01.2021 முதல் தூய்மை பணிகள் நடைபெற்று வந்தன. இந்நிர்வாக அனுமதி பெறப்பட்ட காலம் 31.12.2021 அன்று முடிவடைந்தது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.Roc. சி2/ 16317/2021, நாள். 06.06.2022 -ன்படி 2022 -2023 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியமாக ரூ-424/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இதனை தொடர்ந்து முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண்.சி1/392/2022 நாள்.06.09.2022 பெறப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்காணும் பள்ளிகளில் உள்ள சுற்றுபுறம், வகுப்பறைகளின் எண்ணிக்கை மற்றும் கழிவறைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இதுவரை பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்ட (NULM) பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு திட்டத்தின் மூலம் 01.06.2023 முதல் 30.04.2024 வரை உள்ள பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்த பணியமர்வு செய்திட நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது-

**பகுதி 32**

| வ. எண் | கோ எண் | பள்ளியின் பெயர் | வகுப்பறை சுத்தம் செய்பவர் | கழிவறை சுத்தம் செய்பவர் | வகுப்பறை மற்றும் கழிவறை சுத்தம் செய்பவர் | மொத்தம் | குழு எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 143 | பஞ்சாயத்து யூனியன் நடுநிலை பள்ளி, பாடசாலை தெரு, நொளம்பூர் | 1 | 1 | - | 2 | |
| 2 | 143 | பஞ்சாயத்து யூனியன் துவக்க பள்ளி, 5வது பிளாக், சிவன்கோயில் தெரு. | - | - | 1 | 1 | |
| 3 | 144 | அரசு உயர்நிலைப் பள்ளி, சன்னதி தெரு, மதுரவாயல் | 2 | 2 | | 4 | |
| 4 | 144 | பஞ்சாயத்து யூனியன் துவக்க பள்ளி, சன்னதி தெரு, மதுரவாயல் | - | - | 1 | 1 | |
| 5 | 144 | ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளி, பாரதியார் தெரு, மதுரவாயல் | 1 | 1 | - | 2 | |
| 6 | 144 | பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளி 4வது பிரதான சாலை மதுரவாயல் | 1 | 1 | - | 2 | II |
| 7 | 147 | அரசு துவக்க பள்ளி, பெருமாள் கோயில் தெரு, ஆலப்பாக்கம் | - | - | 1 | 1 | |
| 8 | 147 | அரசு உயர்நிலைப் பள்ளி, பிரதான சாலை ஆலப்பாக்கம் | 1 | 1 | - | 2 | |
| 9 | 147 | அரசு உயர்நிலைப் பள்ளி தெரு, கங்கா நகர், மதுரவாயல் | 1 | 1 | - | 2 | III |
| | | மொத்தம் | 7 | 7 | 3 | 17 | |

**பகுதி 33**

| வ. எண் | கோ. எண் | பள்ளியின் பெயர் | வகுப்பறை சுத்தம் செய்பவர் | கழிவறை சுத்தம் செய்பவர் | வகுப்பறை மற்றும் கழிவறை சுத்தம் செய்பவர் | மொத்தம் | குழு எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 145 | அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் துவக்கப் பள்ளிக்கூட தெரு, நெற்குன்றம் | 1 | 1 | . | 2 | |
| 2 | 148 | வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளி, நெற்குன்றம். | 1 | 1 | . | 2 | |
| 3 | 152 | ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளி ஆற்காடு சாலை வளசரவாக்கம் | 1 | 1 | . | 2 | IV |
| | | மொத்தம் | 3 | 3 | - | 6 | |

**பகுதி 34**

| வ. எண் | கோ. எண் | பள்ளியின் பெயர் | வகுப்பறை சுத்தம் செய்பவர் | கழிவறை சுத்தம் செய்பவர் | வகுப்பறை மற்றும் கழிவறை சுத்தம் செய்பவர் | மொத்தம் | **குழு எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 150 | நடுநிலைப் பள்ளி, காரம்பாக்கம். | 1 | 1 | - | 2 | |
| 2 | 150 | வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி செட்டியார் அகரம். | - | - | 1 | 1 | |
| 3 | 151 | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பள்ளி சாலை, போரூர். | 4 | 1 | | 5 | |
| 4 | 151 | வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளி, பூத்தபேடு, போரூர். | 1 | 1 | - | 2 | V |
| 5 | 153 | வில்லிவாக்கம் துவக்கப் பள்ளி, செட்டி தெரு, போரூர். | - | - | 1 | 1 | |
| 6 | 153 | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, செட்டி தெரு, போரூர். | 2 | 1 | - | 3 | |
| 7 | 155 | அரசு உயர்நிலை பள்ளி, ஈஸ்வரன் கோயில் தெரு, இராமாபுரம். | 1 | 1 | - | 2 | |
| 8 | 155 | பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளி, ஈஸ்வரன் கோயில் தெரு, இராமாபுரம். | - | - | 1 | 1 | VI |
| | | மொத்தம் | 9 | 5 | 3 | 17 | 6 |

மேற்படி பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டைவீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்த பெறப்பட்ட நிர்வாக அனுமதி காலம் 30.04.2023 அன்று முடிவுற்ற நிலையில் தொடர்ந்து இப்பணிகளை மேற்கொள்ள,

அ) அவசர அவசியம் காரணமாக மண்டலம் 11, பகுதி 32, 33 (ம) 34, கோட்டம் 143 முதல் 155 வரை உள்ள 21 பள்ளிகள் சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை சுத்தம் செய்யும் பணியினை தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் 01.09.2022 முதல் 30.04.2023 வரை பணி முடிவடைந்தது. தற்போது 01.06.2023 முதல் 30.04.2024 வரை உள்ள பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்த சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2022 -2023 ஆண்டிற்கான ஊதிய நிர்ணயம் ஆணையின்படி தற்காலிக தூய்மை பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும்,

ஆ) தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணி மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கவும்,

இ) இப்பணிக்கு தேவையான நிதியாக நபர் ஒருவருக்கு தினசரி ஊதியம் ரூ.424/- வீதம், (334 நாட்கள் X ரூ. 424/- X 40 நபர்கள்) என ரூ.56,64,640/- ஐ (ரூபாய் ஐம்பத்து ஆறு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று நாற்பது மட்டும்) 20-21-07 / 230-150-500 வருவாய் நிதி தனியார்மயம் பள்ளி பராமரிப்பு என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும் மற்றும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய தேவைப்படும் பொருட்கள் (துடப்பம், பிளீச்சிங் பவுடர், பிரஷ், பெனாயில்) அந்தந்த பள்ளியின் *PTA* நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பின்னர் அச்செலவீனங்கள் மாநகராட்சி மூலம் திரும்ப வழங்கவும்,

மேற்கண்ட 'அ முதல் இ' வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ15.பொ.சு.து.ந.க.எண்.எச்2/ 0137/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:335/2023** **பொருள் எண்.57**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-15, பகுதி-44 மற்றும் 45, கோட்டம்-192 முதல் 200 வரை - தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட 159 நபர்களின் பணிக்காலம் 28.04.2023 அன்றுடன் முடிவடைவது - மீண்டும் 29.04.2023 முதல் 28.04.2024 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களில் இருந்து 159 நபர்களை பணியமர்த்தி சுகாதார பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-15, (சோழிங்கநல்லூர்), பகுதி-44 மற்றும் 45, கோட்டம்-192 முதல் 200 வரை 9 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக வரையறைக்கப்பட்டுள்ளபடி, இந்த மண்டலத்தில் தோராயமாக 2,284 சாலைகள் / தெருக்கள், 56,352 வீடுகளும், சுமார் 3.15 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும். மேலும், பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் ஒக்கியம் மடு ஆகிய நீர்வழிப்பாதைகள் செல்கின்றன மற்றும் 64.99 கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால் கால்வாய் கொண்ட பகுதியாகும்.

**மேற்கண்ட 9 கோட்டங்களில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள**

1. வீடுதோறும் கொசு மருந்து போடும் பணி, கொசுகொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை பணி, சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி, கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி ஆகிய கொசு தடுப்பு பணிகள்
2. காய்ச்சல் கண்டறியும் பணி
3. நீரினால் பரவும் நோய்களை தடுக்கும் பணி
4. தொற்றா நோய்களை வீடுதோறும் சென்று கண்டறியும் பணி மற்றும் வீடுகள்தோறும் சென்று தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணி
5. வீடுகள், புதிய கட்டிடம் கட்டும் இடங்களில் கொசுப்புழு கண்டறியும் பணி
6. காலிமனைகளில் உள்ள தேவையற்ற பொருட்களில் நீர் தேங்கா வண்ணம் அப்புறப்படுத்தும் பணி
7. ஆன்லைன் புகார்கள்(PGR) பெறப்பட்ட இடங்களில் சென்று ப்ளீச்சிங் பவுடர் தூவுதல் மற்றும் கைத் தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி
8. கொரோனா தொற்று ஏற்பட்டவர்களை கண்காணிக்கும் பணி
9. மாடு பிடிக்கும் பணி
10. தடை செய்யப்பட்ட நெகிழி பறிமுதல் செய்யும் பணி
11. உண்ண தகுதியற்ற இறைச்சியை பறிமுதல் செய்யும் பணி
12. காசநோய் கண்டறியும் பணி
13. சாதாரண மருத்துவ முகாம்கள் மற்றும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்துதல்
14. IHIP மூலம் தெரிவிக்கப்படும் நோயாளிகளை கண்டறியும் பணி மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள்

மண்டலம்-15, கோட்டம் 192 முதல் 200 வரை, பொது சுகாதாரத்துறை பிரிவில் நிரந்தர சுகாதார பணியாளர்கள் தற்போது 22 நபர்கள் பணியாற்றி வருகின்றனர். மேலும் ஒரு நபர் மயான உதவியாளராக மாற்றுப்பணி அடிப்படையில் சுகாதார பிரிவில் பணிபுரிந்து வருகிறார். எனவே, 22 நிரந்தர சுகாதார பணியாளர்கள் மற்றும் மயான பூமியில் பணிபுரிபவர் 1 என மொத்தம் 23 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

இதில் செக்டார் பணியாளர் – 1, மழைநீர் வடிகால்வாய் – 3 பேர், வீடுகளில் மருந்து தெளிக்கும் பணிக்கு - 4 பேர், கை புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள-5 பேர், வாகனப் புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணி மேற்கொள்ள - 04 பேர், கால்வாய் பணிக்கு - 02 பேர், மயான பூமியில் பணிபுரிபவர் (மாற்றுப் பணி) - 1, நீண்ட கால விடுப்பு – 02 பேர், மற்றும் மண்டலம்-15ல் தபால் பணிக்கு 1 பணியாளர் என 23 நிரந்த சுகாதார பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

மேற்கண்ட நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 159 நபர்களை 29.04.2022 முதல் 28.04.2023 வரை ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பணியமர்த்தி சுகாதார பணிகள் மேற்கொள்ள, முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் 22.04.2022 நாளிட்ட குறிப்பில் அனுமதி பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

மண்டலம்-15, கோட்டம்-192 முதல் 200 வரை, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பணிபுரியும் நபர்களுக்கு, சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின், 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தினக்கூலி நாளொன்றுக்கு ஊதியம் ரூ.424/- ஆக வழங்கப்பட்டு வருகிறது. மண்டலம்-15, கோட்டம் 192 முதல் 200 வரை, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நபர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | கோட்டம் | குழு எண் / பெயர் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 192 | M/S NULM-15-192-001-PAVALAM | 18 |
| 2 | 193 | M/S NULM-15-193-002-MUTHU | 18 |
| 3 | 194 | M/S NULM-15-194-006-VAIRAM | 22 |
| 4 | 195 | M/S NULM-15-195-003-KOMATHAGAM | 16 |
| 5 | 196 | M/S NULM-15-196-004-MARAGATHAM | 19 |
| 6 | 197 | M/S NULM-15-197-009-MANICKAM | 16 |
| 7 | 198 | M/S NULM-15-198-007-NEELAM | 17 |
| 8 | 199 | M/S NULM-15-199- PUTPARAGAM | 14 |
| 9 | 200 | M/S NULM-15-200-010-VAIDURIAM | 19 |
| மொத்தம் | | | 159 |

மண்டலம்-15, கோட்டம்-192 முதல் 200 வரை, தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 159 நபர்களை பணியமர்த்தி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த பணியானது வரும் *28.04.2023* அன்று முடிவடைவதால், மீண்டும் 29.04.2023 முதல் 28.04.2024 வரை ஒரு வருட காலத்திற்கு (366 நாட்கள்) 159 நபர்களை நியமனம் செய்து சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| அ) | மண்டலம்-15, பகுதி-44 மற்றும் 45, கோட்டம் 192 முதல் 200 வரை *159* நபர்களை 29.04.2023 முதல் 28.04.2024 வரை ஒரு வருட காலத்திற்கு *(366* நாட்கள்) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய உதவிக்குழு மூலம் பணியமர்த்தி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும், |

| | |
|---|---|
| ஆ) | மேற்கண்ட 159 நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2022-2023ம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு நாளொன்றிற்கான ஊதியம் ரூ.424/- வீதம் (159 நபர்கள் *X* 366 நாட்கள் *X* ரூ.424/-) ரூ. 2,46,74,256/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஆறு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து இருநூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) ஊதியம் வழங்கும் செலவீனம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும், |
| இ) | சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2022-*20*23ம் ஆம் நிதி ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையான ரூ.424/-யை தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு வழங்குவதற்கும், பின்னர் 2023-2024 ஆம் நிதியாண்டில் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அந்நபர்களுக்கு வழங்குவதற்கு அனுமதியும், |
| ஈ) | மேற்படி செலவீனத்திற்கு பிரிவு குறியீட்டு எண்.30-*32*-04. கணக்கு தலைப்பு எண்.210-*10-06-02 (payment to casual health works)* என்ற கணக்கு தலைப்பில் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஊதியம் வழங்க அனுமதியும், |
| உ) | இப்பணிக்கு ஒப்பம் கோருவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கையில் இருந்தும் விலக்கு அளிக்க அனுமதியும், |
| ஊ) | சுகாதாரப் பணிகளில் ஈடுபடும் நபர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட மண்டல நல அலுவலர் மூலம் சம்மந்தப்பட்ட நபரை குழுவிலிருந்து நீக்கம் செய்வதற்கும், அதற்கு பதிலாக புதிய நபரை பணியில் சேர்த்துக் கொள்வதற்கும், |

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"*19.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.044/2023, நாள்.19.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"*26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.138/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**சுது.நக.எண். B2/1463/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:336/2023** **பொருள் எண்.58**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை- மண்டலம் 4,5,6,9,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்கள் ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி சித்தா மற்றும் ஹோமியோபதி மருத்துவர்கள், மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் தேவையான மருத்துவர்கள், மருத்துவ சார் பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த, மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Sri Balaji Agencies நிறுவனத்திற்கு பணியாணை வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் மண்டலம் 4,5,6,9,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் மூன்று ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி (Ayurveda, Yoga & Naturopathy, Unani, Siddha, Homeopathy)) மருத்துவ சேவைகளுக்கு தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவசார் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

**அட்டவணை எண்.1**

| Sno | Zone | Place | Name of the Post | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | MO | Pharmacist | Therapeutic Assistant(Male) | Therapeutic Assistant (Female) | Multi Purpose worker |
| AYUSH CLINICS | | | | | | | |
| 1 | 4 | Meenabal Nagar UCHC | 5 | 1 | 1 | 1 | 5 |
| 2 | 10 | Lalithapuram AYUSH Clinic | 5 | 1 | 1 | 1 | 5 |
| 3 | 13 | Maduvankarai UPHC | 5 | 1 | 1 | 1 | 5 |
| UNANI DISPENSARY | | | | | | | |
| 1 | 5 | Corporation Unani Dispensary Bala Muthu Steet, Chennai-2 | 1 | 1 | - | - | 1 |
| 2 | 6 | Corporation Unani Dispensary Sembium, Chennai-11 | 1 | 1 | - | - | 1 |
| HOMEPATHY DIPENSARY | | | | | | | |
| 1 | 9 | Corporation Homeopathy Dispensary , Manthaiveli , Chennai | 1 | - | - | - | - |
| AYURVEDIC DISPENSARY | | | | | | | |
| 1 | 9 | Corporation Ayurvedic Dispensary, Triplicane UPHC building, Dr.Besent Road, Chennai-5 | - | 1 | - | - | - |
| | | Total | 18 | 6 | 3 | 3 | 17 |

**அட்டவணை எண்.2**

**Qualification of Staff**

| Sl.No | Category of Staff | Required Number of Staff | Qualification |
|---|---|---|---|
| 1 | Ayurveda-Doctor | 3 | BAMS from Govt. recognized university |
| 2 | Yoga and naturopathy-Doctor | 3 | BNYS from Govt. recognized university |
| 3 | Unani-Doctor | 5 | BUMS from Govt. recognized university |
| 4 | Siddha-Doctor | 3 | BSMS from Govt. recognized university |
| 5 | Homeopathy-Doctor | 4 | BHMS from Govt. recognized university |
| 6 | Therapeutic Assistant for Yoga and Naturopathy (Male) | 3 | Diploma in Yoga Therapy from Govt. recognized Institution |
| 7 | Therapeutic Assistant for Yoga and Naturopathy (Female) | 3 | Diploma in Yoga Therapy from Govt. recognized Institution |
| 8 | Pharmacist ( Ayurveda, Unani Siddha and Homoeopathy ) | 6 | Diploma in integrated pharmacy (Ayurveda, Unani,Siddha and Homoeopathy) from Govt. recognized Institution |
| 9 | Multipurpose worker | 17 | - |
| | Total | 47 | |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிர்வாகக்கட்டணம் (Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.560/2020, நாள்.21.08.2020-ன்படி ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) வழங்க அனுமதி அளித்துள்ளது.

**அட்டவணை எண்.3**

| Employee's State Insurance (Salary up to Rs.21000) | | Employee's Provident Fund(Salary up to Rs.15000) | | GST |
|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% |

**அட்டவணை எண் 4**

**Office Estimate**

| Sl.No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Administrative Charges (1+2+3) (10%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 0 | 0 | 3000 | 5940 | 38940 | 3 | 14,01,840 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | Yoga and naturopathy-Doctor | 30000 | 0 | 0 | 3000 | 5940 | 38940 | 3 | 14,01,840 |
| 3 | Unani-Doctor | 30000 | 0 | 0 | 3000 | 5940 | 38940 | 5 | 23,36,400 |
| 4 | Siddha-Doctor | 30000 | 0 | 0 | 3000 | 5940 | 38940 | 3 | 14,01,840 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 0 | 0 | 3000 | 5940 | 38940 | 4 | 18,69,120 |
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 1300 | 325 | 1163 | 2302 | 15090 | 3 | 5,43,240 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 1300 | 325 | 1163 | 2302 | 15090 | 3 | 5,43,240 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 1300 | 325 | 1163 | 2302 | 15090 | 6 | 10,86,480 |
| 9 | Multipurpose worker | 8000 | 1040 | 260 | 930 | 1841 | 12071 | 17 | 24,62,484 |
| | Total | | | | | | | 47 | 1,30,46,484 |

முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 09.01.2023 நாளிட்ட ஆணையின்படி ஆயுஷ் மருந்தகங்களுக்கு தேவையான அட்டவணை எண்.1ல் தெரிவிக்கப்பட்ட ஆயுஷ் மருத்துவர்கள், மருத்துவ சார் பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த, மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி மின்னனு ஒப்பம் கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனம் அதிக நிர்வாக கட்டணம் அளித்திருந்ததால், முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 13.01.2023 மற்றும் 28.02.2023 நாளிட்ட ஆணையின்படி, ஒப்பம் ரத்து செய்யப்பட்டு மறு மின்னனு ஒப்பம் (Re-e-Tender) 10.03.2023-ல் கோரப்பட்டது. 28.03.2023 அன்று ஒப்பம் திறக்கப்பட்டதில் அதில் 3 ஒப்பந்ததாரர்கள் ஒப்பப்புள்ளி அளித்திருந்தனர். இதில் மூன்று ஒப்பமும் தொழில்நுட்ப ஒப்பத்தில் தேர்வு செய்யப்பட்டு நிதி ஒப்பம் 30.03.2023 அன்று திறக்கப்பட்டது.

**<u>அட்டவணை எண் -5</u>**

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | தொழில் நுட்ப ஒப்பந்தத்தில் (Technical Bid) கோரப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்பட்ட விவரம் | பரிந்துரை |
|---|---|---|---|
| 1 | M/s.Sri Balaji Agencies, No.1A, Mugathuvarakuppam, 1st Street, Ennore, Chennai-600057 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | ஒப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 2 | M/s. Janishree Corporate Services Pvt Ltd,154/313, 2nd floor, T.T.K.Road, Royapettah, Chennai – 600014 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | ஒப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 3 | M/s. JR Agency, 3/7,Raghavendra 2nd cross street, Ramapuram, Chennai-89 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | ஒப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது |

திறக்கப்பட்ட நிதி ஒப்பத்தின் விவரம் பின்வருமாறு

**அட்டவணை எண் -6**

**M/s. Sri Balaji Agencies -L1 Quoted rate:**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF(13%) (Rs) | ESI(3.25 %)(Rs) | Administrative Charges (1+2+3) (8%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 0 | 0 | 2400.00 | 5832 | 38232 | 3 | 1376352 |
| 2 | Yoga and naturopathy-Doctor | 30000 | 0 | 0 | 2400.00 | 5832 | 38232 | 3 | 1376352 |
| 3 | Unani-Doctor | 30000 | 0 | 0 | 2400.00 | 5832 | 38232 | 5 | 2293920 |
| 4 | Siddha-Doctor | 30000 | 0 | 0 | 2400.00 | 5832 | 38232 | 3 | 1376352 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 0 | 0 | 2400.00 | 5832 | 38232 | 4 | 1835136 |
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 1300 | 325 | 930.00 | 2260 | 14815 | 3 | 533340 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 1300 | 325 | 930.00 | 2260 | 14815 | 3 | 533340 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 1300 | 325 | 930.00 | 2260 | 14815 | 6 | 1066680 |
| 9 | Multipurpose worker | 8000 | 1040 | 260 | 744.00 | 1808 | 11852 | 17 | 2417808 |
| | Total | | | | | | | 47 | 1,28,09,280 |

**அட்டவணை எண் -7**

**M/s.Janishree Corporate Services Pvt Ltd -L2 Quoted rate:**

| Sl.No | Category of Staff | Remunuration per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %)(Rs) | Administrative Charges (1+2+3) (11%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 0 | 0 | 3300.00 | 5994 | 39294 | 3 | 1414584 |
| 2 | Yoga and naturopathy-Doctor | 30000 | 0 | 0 | 3300.00 | 5994 | 39294 | 3 | 1414584 |
| 3 | Unani-Doctor | 30000 | 0 | 0 | 3300.00 | 5994 | 39294 | 5 | 2357640 |
| 4 | Siddha-Doctor | 30000 | 0 | 0 | 3300.00 | 5994 | 39294 | 3 | 1414584 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 0 | 0 | 3300.00 | 5994 | 39294 | 4 | 1886112 |
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 1300 | 325 | 1278.75 | 2323 | 15227 | 3 | 548163 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 1300 | 325 | 1278.75 | 2323 | 15227 | 3 | 548163 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 1300 | 325 | 1278.75 | 2323 | 15227 | 6 | 1096326 |
| 9 | Multipurpose worker | 8000 | 1040 | 260 | 1023.00 | 1858 | 12181 | 17 | 2484924 |
| | Total | | | | | | | 47 | 1,31,65,080 |

**அட்டவணை எண் -8**

**M/s.JR Agencies -L3 Quoted rate:**

| Sl.No | Category of Staff | Remuneration per Month Rs) | EPF (13%) Rs) | ESI (3.25 %)(Rs) | Administrative Charges (1+2+3) (12%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 0 | 0 | 3600.00 | 6048 | 39648 | 3 | 1427328 |
| 2 | Yoga and naturopathy-Doctor | 30000 | 0 | 0 | 3600.00 | 6048 | 39648 | 3 | 1427328 |
| 3 | Unani-Doctor | 30000 | 0 | 0 | 3600.00 | 6048 | 39648 | 5 | 2378880 |
| 4 | Siddha-Doctor | 30000 | 0 | 0 | 3600.00 | 6048 | 39648 | 3 | 1427328 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 0 | 0 | 3600.00 | 6048 | 39648 | 4 | 1903104 |
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 1300 | 325 | 1200.00 | 2309 | 15134 | 3 | 544824 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 1300 | 325 | 1200.00 | 2309 | 15134 | 3 | 544824 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 1300 | 325 | 1200.00 | 2309 | 15134 | 6 | 1089648 |
| 9 | Multipurpose worker | 8000 | 1040 | 260 | 960.00 | 1847 | 12107 | 17 | 2469828 |
| | Total | | | | | | | 47 | 1,32,13,092 |

மேற்கண்ட பணி மேற்கொள்ள அலுவலக மதிப்பீடாக ரூ.1,30,46,484/- செலவினம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் M/s. Sri Balaji Agencies (L1) அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,28,09,280/-அலுவலக மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில்(-)1.82% குறைவாக உள்ளது. மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் 30.03.2023 தேதியில் விலைக்குறைப்பு செய்து அளிக்க கோரியதில் அவர்கள் 31.03.2023 தேதியில் கீழ்க்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து அளித்தனர்.

**அட்டவணை எண் -9**

**M/s. Sri Balaji Agencies -L1-Negotiatied amount**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF(13%) (Rs) | ESI(3.25 %)(Rs) | Administrative Charges (1+2+3) (6%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Ayurveda-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 1350864 |
| 2 | Yoga and naturopathy-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 1350864 |
| 3 | Unani-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 5 | 2251440 |
| 4 | Siddha-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 3 | 1350864 |
| 5 | Homeopathy-Doctor | 30000 | 0 | 0 | 1800 | 5724 | 37524 | 4 | 1801152 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | Therapeutic Assistant (Male) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 3 | 523476 |
| 7 | Therapeutic Assistant (Female) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 3 | 523476 |
| 8 | Pharmacist (AYUSH) | 10000 | 1300 | 325 | 698 | 2218 | 14541 | 6 | 1046952 |
| 9 | Multipurpose worker | 8000 | 1040 | 260 | 558 | 1774 | 11632 | 17 | 2372928 |
| | Total | | | | | | | 47 | 1,25,72,016 |

இது சம்பந்தமாக ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு 11.04.2023 அன்று கூடி ஒப்பந்ததாரரை மேலும் விலைக்குறைப்பு செய்து அளிக்க கோரி பரிந்துரை செய்தது. ஒப்பந்ததாரரிடம் மேலும் விலைக்குறைப்பு செய்து அளிக்க கோரியதில் அவர்கள் 13.04.2023 தேதியில் அவர்களின் நிர்வாக கட்டணத்தினை குறைக்க இயலாது என கடிதம் அளித்துள்ளனர்.

எனவே, இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்ப கூர்ந்தாய்வு குழு 13.04.2023 அன்று கூடி கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்கிறது.

1. மேற்கண்ட பணிக்கு பணியாளர்களை பணியமர்த்த, சரியான நிர்வாக கட்டணம் நிர்ணயிக்க ஏதுவாக மறு ஒப்பம் கோரப்பட்டுள்ள நிலையில், தற்போதைய ஒப்பந்தத்தில் மூன்று ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டுள்ள நிலையிலும்,
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் நிர்வாக கட்டணத்தினை ஒரு முறை குறைப்பு செய்து அளித்து, மேலும் குறைக்க இயலாது என தெரிவித்துள்ள நிலையிலும்,
3. ஆயுஷ் மருந்தகங்களில் மருத்துவ சேவைகளை தடையின்றி தொடர, அத்தியாவசியமாக மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் தேவைப்படுவதால், அவசர அவசியம் கருதியும்,
4. ஒப்பந்ததாரர் இறுதியாக ஒப்புக்கொண்ட நிர்வாக கட்டணமானது அலுவலக மதிப்பீட்டிற்குள் உள்ளதாலும், அதாவது, ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.1,25,72,016/- யானது அலுவலக மதிப்பீடான ரூ.1,30,46,484/ உடன் ஒப்பிடுகையில் (-) 4% (lower) *(Exclusive GST)* குறைவாக உள்ளதாலும்,

குறைந்த ஒப்பத் தொகை அளித்துள்ள M/s.Sri Balaji Agencies நிறுவனத்தினரின் ஒப்பத்தினை ஏற்றுக்கொள்ள ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, மண்டலம்-4,5,6,9,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்களுக்கு (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றம் ஹோமியோபதி) தேவையான ஆயுஷ் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பம் கோரியதற்கு மன்றத்தின் அனுமதிக்கும்,
2. அட்டவணை 1ல் தெரிவிக்கப்பட்ட ஆயுஷ் மருந்தகங்களுக்கு (ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றம் ஹோமியோபதி) தேவையான ஆயுஷ் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள்(பணியாணை வழங்கப்படும் நாளிலிருந்து) ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த மேற்கண்ட ஒப்பம் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (அட்டவணை 9ல் தெரிவிக்கப்பட்டவாறு) M/s. Sri Balaji Agencies நிறுவனத்தினருக்கு ரூ. 1,25,72,016/-(ரூபாய் ஒரு கோடியே இருபத்தி ஐந்து லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து பதினாறு மட்டும்)க்கு

மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னர் ஒராண்டு காலத்திற்கு பணியாணை வழங்க அனுமதிக்கும்,

3. மேற்கண்ட நிறுவனத்திடம் ஒப்பந்ததொகையில் 2% பிணை வைப்பு தொகையாக பெறவும், ஒப்பந்தம் செய்யவும் மற்றும் பணி முடிவடைந்ததும் பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கவும்,
4. இதற்கான செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் செலவினம் மேற்கொள்ள அனுமதித்துக் கொள்ளவும்,
5. மாண்புமிகு மேயர் அவர்களின் மேற்குறிப்பில், பொது சுகாதாரத் துறை, மண்டலம்-4,5,6,9,10 மற்றும் 13ல் செயல்பட்டு வரும் ஆயுஷ் மருந்தகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் மருத்துவர் மற்றும் மருத்துவம் சார் பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்த அவசரம் மற்றும் அவசியம் கருதி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

*“26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.131/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*”*.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.**

**********

**சுது.நக.எண். B2/1464/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:337/2023** **பொருள் எண்.59**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை- தொற்று நோய் மருத்துவமனைக்கு தேவையான முதல்வர் மற்றும் இதர மருத்துவ சார் பணியாளர்களை ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த மறு மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - ஒப்பந்தத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Janishree Corporate Services Pvt Ltd நிறுவனத்திற்கு ஓராண்டு காலத்திற்கு பணியாணை வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

மன்றத் தீர்மான எண்.677/2022, நாள்.28.12.2022-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தொற்று நோய் மருத்துவமனையில் இரண்டாண்டு உதவி செவிலியர் பட்டயபடிப்பு (ANM COURSE) பயிற்சிக்கு தேவையான முதல்வர் மற்றும் இதர மருத்துவ சார் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்த மின்னணு ஒப்பம் கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனம் அதிக நிர்வாக கட்டணம் அளித்திருந்ததால், முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 28.02.2021 ஆணையின்படி, ஒப்பம் ரத்து செய்யப்பட்டு மறு மின்னணு ஒப்பம் (Re-e-Tender) 10.03.2023-ல் கோரப்பட்டது. 28.03.2023 அன்று ஒப்பம் திறக்கப்பட்டதில் அதில் 2 ஒப்பந்ததாரர்கள் ஒப்பப்புள்ளி அளித்திருந்தனர். இதில் இரண்டு ஒப்பமும் தொழில்நுட்ப ஒப்பத்தில் தேர்வு செய்யப்பட்டு நிதி ஒப்பம் 30.03.2023 அன்று திறக்கப்பட்டது.

**அட்டவணை எண் -1**

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | தொழில் நுட்ப ஒப்பந்ததில் (Technical Bid) கோரப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்பட்ட விவரம் | பரிந்துரை |
|---|---|---|---|
| 1 | M/s. Janishree Corporate Services Pvt Ltd,154/313, 2nd floor, T.T.K.Road, Royapettah, Chennai – 600014 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | ஒப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 2 | M/s. JR Agency, 3/7,Raghavendra 2nd cross street, Ramapuram, Chennai-89 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | ஒப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது |

திறக்கப்பட்ட நிதி ஒப்பங்களின் விவரம் பின்வருமாறு

**அட்டவணை எண் -2**

**M/s. Janishree Corporate Services Pvt Ltd -L1**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF (13%) | ESI(3.25 %)(Rs) | Admin Charges (1+2+3)(11%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Staff nurses | 18000 | 0 | 0 | 1980.00 | 3596 | 23576.00 | 14 | 3960768 |
| 2 | X- Ray Technician | 12000 | 1560 | 390 | 1534.50 | 2787 | 18271.50 | 1 | 219258 |
| 3 | Counsellor | 15000 | 1950 | 488 | 1918.18 | 3484 | 22840.18 | 1 | 274082 |
| 4 | Physiotherapist | 15000 | 1950 | 488 | 1918.18 | 3484 | 22840.18 | 1 | 274082 |
| 5 | Yoga teacher | 13000 | 1690 | 423 | 1662.43 | 3020 | 19795.43 | 1 | 237545 |
| 6 | FNA | 8500 | 1105 | 276 | 1086.91 | 1974 | 12941.91 | 8 | 1242423 |
| 7 | MNA | 8500 | 1105 | 276 | 1086.91 | 1974 | 12941.91 | 8 | 1242423 |
| 8 | Principal | 30000 | 0 | 0 | 3300.00 | 5994 | 39294.00 | 1 | 471528 |
| 9 | Tutor | 18000 | 0 | 0 | 1980.00 | 3596 | 23576.00 | 8 | 2263296 |
| 10 | Warden | 17000 | 0 | 0 | 1870.00 | 3397 | 22267.00 | 1 | 267204 |
| 11 | Clerk cum Typist | 10790 | 1403 | 351 | 1379.84 | 2506 | 16429.84 | 2 | 394316 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | Cook | 9570 | 1244 | 311 | 1223.75 | 2223 | 14571.75 | 3 | 524583 |
| 13 | Cook Assistant | 8500 | 1105 | 276 | 1086.91 | 1974 | 12941.91 | 3 | 465909 |
| 14 | Laundry plant Operator | 9410 | 1223 | 306 | 1203.29 | 2186 | 14328.29 | 1 | 171939 |
| 15 | Laundry plant Helper | 8500 | 1105 | 276 | 1086.91 | 1974 | 12941.91 | 1 | 155303 |
| 16 | Tutor (for DMLT Course) | 21000 | 0 | 0 | 2310.00 | 4196 | 27506.00 | 2 | 660144 |
| 17 | Telephone Operator | 10800 | 1404 | 351 | 1381.05 | 2508 | 16444.05 | 2 | 394657 |
| | | | | | | | | 58 | 1,32,19,460 |

**அட்டவணை எண் -3**

**M/s. J.R. Agencies -L2**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF (13%) | ESI (3.25 %)(Rs) | Admin Charges (1+2+3)(12%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Staff nurses | 18000 | 0 | 0 | 2160.00 | 3629 | 23789.00 | 14 | 3996552 |
| 2 | X- Ray Technician | 12000 | 1560 | 390 | 1440.00 | 2770 | 18160.00 | 1 | 217920 |
| 3 | Counsellor | 15000 | 1950 | 488 | 1800.00 | 3463 | 22701.00 | 1 | 272412 |
| 4 | Physiotherapist | 15000 | 1950 | 488 | 1800.00 | 3463 | 22701.00 | 1 | 272412 |
| 5 | Yoga teacher | 13000 | 1690 | 423 | 1560.00 | 3001 | 19674.00 | 1 | 236088 |
| 6 | FNA | 8500 | 1105 | 276 | 1020.00 | 1962 | 12863.00 | 8 | 1234848 |
| 7 | MNA | 8500 | 1105 | 276 | 1020.00 | 1962 | 12863.00 | 8 | 1234848 |
| 8 | Principal | 30000 | 0 | 0 | 3600.00 | 6048 | 39648.00 | 1 | 475776 |
| 9 | Tutor | 18000 | 0 | 0 | 2160.00 | 3629 | 23789.00 | 8 | 2283744 |
| 10 | Warden | 17000 | 0 | 0 | 2040.00 | 3427 | 22467.00 | 1 | 269604 |
| 11 | Clerk cum Typist | 10790 | 1403 | 351 | 1294.80 | 2491 | 16329.80 | 2 | 391915 |
| 12 | Cook | 9570 | 1244 | 311 | 1148.40 | 2209 | 14482.40 | 3 | 521366 |
| 13 | Cook Assistant | 8500 | 1105 | 276 | 1020.00 | 1962 | 12863.00 | 3 | 463068 |
| 14 | Laundry plant Operator | 9410 | 1223 | 306 | 1129.20 | 2172 | 14240.20 | 1 | 170882 |
| 15 | Laundry plant Helper | 8500 | 1105 | 276 | 1020.00 | 1962 | 12863.00 | 1 | 154356 |
| 16 | Tutor (for DMLT Course) | 21000 | 0 | 0 | 2520.00 | 4234 | 27754.00 | 2 | 666096 |
| 17 | Telephone Operator | 10800 | 1404 | 351 | 1296.00 | 2493 | 16344.00 | 2 | 392256 |
| | | | | | | | | 58 | 1,32,54,143 |

இந்த பணிக்கென கீழ்க்கண்டவாறு அலுவலக மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

**அட்டவணை எண் -4**

**Office Workable Rate**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF (13%) | ESI (3.25 %) (Rs) | Admin Charges (1+2+3)(10%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Staff nurses | 18000 | 0 | 0 | 1800 | 3564 | 23364 | 14 | 39,25,152 |
| 2 | X- Ray Technician | 12000 | 1560 | 390 | 1395 | 2762 | 18107 | 1 | 2,17,284 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | Counsellor | 15000 | 1950 | 488 | 1744 | 3453 | 22635 | 1 | 2,71,620 |
| 4 | Physiotherapist | 15000 | 1950 | 488 | 1744 | 3453 | 22635 | 1 | 2,71,620 |
| 5 | Yoga teacher | 13000 | 1690 | 423 | 1511 | 2992 | 19616 | 1 | 2,35,392 |
| 6 | FNA | 8500 | 1105 | 276 | 988 | 1956 | 12825 | 8 | 12,31,200 |
| 7 | MNA | 8500 | 1105 | 276 | 988 | 1956 | 12825 | 8 | 12,31,200 |
| 8 | Principal | 30000 | 0 | 0 | 3000 | 5940 | 38940 | 1 | 4,67,280 |
| 9 | Tutor | 18000 | 0 | 0 | 1800 | 3564 | 23364 | 8 | 22,42,944 |
| 10 | Warden | 17000 | 0 | 0 | 1700 | 3366 | 22066 | 1 | 2,64,792 |
| 11 | Clerk cum Typist | 10790 | 1403 | 351 | 1254 | 2484 | 16282 | 2 | 3,90,768 |
| 12 | Cook | 9570 | 1244 | 311 | 1113 | 2203 | 14441 | 3 | 5,19,876 |
| 13 | Cook Assistant | 8500 | 1105 | 276 | 988 | 1956 | 12825 | 3 | 4,61,700 |
| 14 | Laundry plant Operator | 9410 | 1223 | 306 | 1094 | 2166 | 14199 | 1 | 1,70,388 |
| 15 | Laundry plant Helper | 8500 | 1105 | 276 | 988 | 1956 | 12825 | 1 | 1,53,900 |
| 16 | Tutor (for DMLT Course) | 21000 | 0 | 0 | 2100 | 4158 | 27258 | 2 | 6,54,192 |
| 17 | Telephone Operator | 10800 | 1404 | 351 | 1256 | 2486 | 16297 | 2 | 3,91,128 |
| | | | | | | | | 58 | 1,31,00,436 |

மேற்கண்ட பணி மேற்கொள்ள அலுவலக மதிப்பீடாக ரூ.1,31,00,436/- செலவினம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் M/s. Janishree Corporate Services Pvt Ltd (L1) அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,32,19,460/- அலுவலக மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் (+)0.91% கூடுதலாக உள்ளது. மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் 30.03.2023 தேதியில் விலைக்குறைப்பு செய்து அளிக்க கோரியதில் அவர்கள் 31.03.2023 தேதியில் கீழ்க்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து அளித்தனர்.

**<u>அட்டவணை எண் -5</u>**

**<u>M/s. Janishree Corporate Services Pvt Ltd -L1-Negotiatied amount</u>**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF (13%) | ESI (3.25 %) (Rs) | Admin Charges (1+2+3)(8%) | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Number of Staff | Total 12 months Rs (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Staff nurses | 18000 | 0 | 0 | 1620 | 3532 | 23152 | 14 | 3889536 |
| 2 | X- Ray Technician | 12000 | 1560 | 390 | 1256 | 2737 | 17943 | 1 | 215316 |
| 3 | Counsellor | 15000 | 1950 | 488 | 1569 | 3421 | 22428 | 1 | 269136 |
| 4 | Physiotherapist | 15000 | 1950 | 488 | 1569 | 3421 | 22428 | 1 | 269136 |
| 5 | Yoga teacher | 13000 | 1690 | 423 | 1360 | 2965 | 19438 | 1 | 233256 |
| 6 | FNA | 8500 | 1105 | 276 | 889 | 1939 | 12709 | 8 | 1220064 |
| 7 | MNA | 8500 | 1105 | 276 | 889 | 1939 | 12709 | 8 | 1220064 |
| 8 | Principal | 30000 | 0 | 0 | 2700 | 5886 | 38586 | 1 | 463032 |
| 9 | Tutor | 18000 | 0 | 0 | 1620 | 3532 | 23152 | 8 | 2222592 |
| 10 | Warden | 17000 | 0 | 0 | 1530 | 3335 | 21865 | 1 | 262380 |
| 11 | Clerk cum Typist | 10790 | 1403 | 351 | 1129 | 2461 | 16134 | 2 | 387216 |
| 12 | Cook | 9570 | 1244 | 311 | 1001 | 2183 | 14309 | 3 | 515124 |
| 13 | Cook Assistant | 8500 | 1105 | 276 | 889 | 1939 | 12709 | 3 | 457524 |
| 14 | Laundry plant Operator | 9410 | 1223 | 306 | 985 | 2146 | 14070 | 1 | 168840 |
| 15 | Laundry plant Helper | 8500 | 1105 | 276 | 889 | 1939 | 12709 | 1 | 152508 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | Tutor (for DMLT Course) | 21000 | 0 | 0 | 1890 | 4120 | 27010 | 2 | 648240 |
| 17 | Telephone Operator | 10800 | 1404 | 351 | 1130 | 2463 | 16148 | 2 | 387552 |
| | | | | | | | | 58 | 1,29,81,516 |

இது சம்பந்தமாக ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு 11.04.2023 அன்று கூடி ஒப்பந்ததாரரை மேலும் விலைக்குறைப்பு செய்து அளிக்க பரிந்துரை செய்தது. ஒப்பந்ததாரரிடம் மேலும் விலைக்குறைப்பு செய்து அளிக்க கோரியதில் அவர்கள் 13.04.2023 தேதியில் கீழ்க்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து அளித்துள்ளனர்.

**அட்டவணை எண் -6**

**M/s. Janishree Corporate Services Pvt Ltd - 2nd Negotiated Amount**

| Sl.No | Category of Staff | Remuneration per Month (Rs) | EPF (13%) | ESI (3.25 %)(Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Number of Staff | Total 12 months Rs (7x8x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Staff nurses | 18000 | 0 | 0 | 1440 | 3499 | 22939 | 14 | 3853752 |
| 2 | X- Ray Technician | 12000 | 1560 | 390 | 1116 | 2712 | 17778 | 1 | 213336 |
| 3 | Counsellor | 15000 | 1950 | 488 | 1395 | 3390 | 22223 | 1 | 266676 |
| 4 | Physiotherapist | 15000 | 1950 | 488 | 1395 | 3390 | 22223 | 1 | 266676 |
| 5 | Yoga teacher | 13000 | 1690 | 423 | 1209 | 2938 | 19260 | 1 | 231120 |
| 6 | FNA | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 8 | 1208832 |
| 7 | MNA | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 8 | 1208832 |
| 8 | Principal | 30000 | 0 | 0 | 2400 | 5832 | 38232 | 1 | 458784 |
| 9 | Tutor | 18000 | 0 | 0 | 1440 | 3499 | 22939 | 8 | 2202144 |
| 10 | Warden | 17000 | 0 | 0 | 1360 | 3305 | 21665 | 1 | 259980 |
| 11 | Clerk cum Typist | 10790 | 1403 | 351 | 1004 | 2439 | 15987 | 2 | 383688 |
| 12 | Cook | 9570 | 1244 | 311 | 890 | 2163 | 14178 | 3 | 510408 |
| 13 | Cook Assistant | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 3 | 453312 |
| 14 | Laundry plant Operator | 9410 | 1223 | 306 | 875 | 2127 | 13941 | 1 | 167292 |
| 15 | Laundry plant Helper | 8500 | 1105 | 276 | 790 | 1921 | 12592 | 1 | 151104 |
| 16 | Tutor (for DMLT Course) | 21000 | 0 | 0 | 1680 | 4082 | 26762 | 2 | 642288 |
| 17 | Telephone Operator | 10800 | 1404 | 351 | 1004 | 2441 | 16000 | 2 | 384000 |
| | | | | | | | | 58 | 1,28,62,224 |

மேலும், இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்ப கூர்ந்தாய்வு குழு 13.04.2023 அன்று கூடி கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

1. மேற்கண்ட பணிக்கு பணியாளர்களை பணியமர்த்த, சரியான நிர்வாக கட்டணம் நிர்ணயிக்க ஏதுவாக மறு ஒப்பம் கோரப்பட்டுள்ள நிலையில், தற்போதைய ஒப்பந்தத்தில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டுள்ள நிலையிலும்,
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் நிர்வாக கட்டணத்தினை இரண்டு முறை குறைப்பு செய்து அளித்து, மேலும் குறைக்க இயலாது என தெரிவித்துள்ள நிலையிலும்,
3. தொற்று நோய் மருத்துவமனையில், சேவைகளை தடையின்றி தொடர, அத்தியாவசியமாக பணியாளர்கள் தேவைப்படுதால், அவசர அவசியம் கருதியும்,

4. ஒப்பந்ததாரர் இறுதியாக ஒப்புக்கொண்ட நிர்வாக கட்டணமானது அலுவலக மதிப்பீட்டிற்குள் உள்ளதாலும், அதாவது, ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,28,62,224/-யானது அலுவலக மதிப்பீடான ரூ.1,31,00,436/- உடன் ஒப்பிடுகையில் (-) 2% (lower) (Exclusive GST) குறைவாக உள்ளதாலும்,

குறைந்த ஒப்பத் தொகை அளித்துள்ள M/s. Janishree Corporate Services Pvt Ltd நிறுவனத்தினரின் ஒப்பத்தினை ஏற்றுக்கொள்ள ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, தொற்று நோய் மருத்துவமனையில் இரண்டாண்டு உதவி செவிலியர் பட்டயபடிப்பு (ANM COURSE), பயிற்சிக்கு தேவையான முதல்வர் மற்றும் இதர பணியாளர்கள் மற்றும் மருத்துவமனை பணிகளுக்கு தேவையான மருத்துவ சார் பணியாளர்கள் (Para Medical Staff) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி M/s. Janishree Corporate Services Pvt Ltd நிறுவனத்தினருக்கு ரூ. 1,28,62,224/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி எட்டு லட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து இருநூற்றி இருபத்தி நான்கு மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னர் ஒராண்டு காலத்திற்கு பணியாணை வழங்க அனுமதிக்கவும்,
2. மேற்கண்ட நிறுவனத்திடம் ஒப்பந்த தொகையில் 2% பிணை வைப்பு தொகையாக பெறவும் மற்றும் ஒப்பந்தம் செய்யவும், பணி முடிந்து பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கவும்,
3. இதற்கான செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் செலவினம் மேற்கொள்ள அனுமதித்துக் கொள்ளவும்,
4. மாண்புமிகு மேயர் அவர்களின் மேற்குறிப்பில், பொது சுகாதாரத்துறை தொற்று நோய் மருத்துவமனைக்கு தேவையான முதல்வர் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அவசரம் மற்றும் அவசியம் கருதி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “*26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.132/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.**

**********

**சு.து.ந.க.எண்.பி2/1462/2023**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.04.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:338/2023** **பொருள் எண்.60**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறைக்கு தேவையான 136 எண்ணிக்கையிலான கணினி பதிவாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Sri Balaji Agencies நிறுவனத்திற்கு ஓராண்டு காலத்திற்கு பணியாணை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி.**

மன்றத் தீர்மான எண்.676/2022, நாள்.28.12.2022-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை மற்றும் மருத்துவ சேவைகள் துறைக்கு தேவையான 136 எண்ணிக்கையிலான கணினி பதிவாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்த மின்னணு ஒப்பம் கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனம் அதிக நிர்வாக கட்டணம் அளித்திருந்ததால், முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 28.02.2023 நாளிட்ட ஆணையின்படி, ஒப்பம் ரத்து செய்யப்பட்டு மறு மின்னணு ஒப்பம் (Re-e-Tender) 10.03.2023-ல் கோரப்பட்டது. 13.04.2023 அன்று ஒப்பம் திறக்கப்பட்டதில் அதில் 4 ஒப்பந்ததாரர்கள் ஒப்பப்புள்ளி அளித்திருந்தனர்.

**அட்டவணை எண்.1**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | தொழில்நுட்ப ஒப்பத்தில் (Technical Bid) கோரப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ள விவரம். | பரிந்துரை |
|---|---|---|---|
| 1 | M/s. Sri Balaji Agencies, No.1A, Mugathuvarakuppam, 1st Steet, Ennore, Chennai-57 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது | ஒப்பம் ஏற்கப்பட்டது |
| 2 | M/s.Somesh Enterprises, No.47,1st Floor, Sydenhas Road, Periamet, Chennai-600003 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 3 | M/s.CAPCP BENCHMARKING SERVICES PRIVATE LTD,3rd Main Road, Ambathur Industrial Estate, Chennai-58 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 4 | M/s. Escorts Security & Personel Services, 401-404, 4th Floor, Orchid Plaza, Behind Mc Donald's Sama- Savli Road, Vadodara-390024 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |

வரிசை எண் 1 ல் தெரிவிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் M/s. Sri Balaji Agencies (L1) போதிய ஆவணம் அளித்திருந்த காரணத்தினால் அவரின் தொழிற்நுட்ப ஒப்பம் ஏற்கப்பட்டு நிதி ஒப்பம் 18.04.2023 அன்று திறக்கப்பட்டது. நிதி ஒப்பத்தின் விவரம் பின்வருமாறு

**அட்டவணை எண்.2**

**Rate Quoted by the Bidder for providing 136 Data Entry Operators**

| SI.No | Name of the Bidder | DEO's Remuneration per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges (5%)1+2+3) (Rs) | GST 18% (1+2+3+4)(Rs) | Total (1+2+3+4+5) (Rs) | Required Staff | Cost for One year (Rs) (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | M/s. Sri Balaji Agencies (L1) | 12,630 | 1642 | 410 | 734.10 | 2775 | 18191 | 136 | 2,96,87,875 |

மன்றத் தீர்மான எண்.676/2022, நாள்.28.12.2022-ன்படி அலுவலக மதிப்பீடானது மேற்கண்ட பணிக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்.3**

**Office Workable Rate**

| Sl.No | Name of the Post | Remuneration per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges (10%) (1+2+3) (Rs) | GST 18% (1+2+3+4) (Rs) | Total (Rs) | Required Staff | Cost for One year (Rs) (6x7x12m) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operator | 12630 | 1642 | 410 | 1468 | 2907 | 19057 | 136 | 3,11,01,024 |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Sri Balaji Agencies (L1) அவர்களிடம் 18.04.2023 தேதியில் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் 19.04.2023 தேதியில் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளனர்.

இது சம்பந்தமாக ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு 24.04.2023 அன்று கூடி ஒப்பந்ததாரரை மேலும் விலைக்குறைப்பு செய்து அளிக்க பரிந்துரை செய்தது. ஒப்பந்ததாரரிடம் மேலும் விலைக்குறைப்பு செய்து அளிக்க கோரியதில் அவர்கள் 25.04.2023 தேதியில் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளனர். எனவே கூர்ந்தாய்வு குழு மீண்டும் 25.04.2023 அன்று கூடி கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

**அட்டவணை எண்.4**

**After Negotiation Rate**

| Sl.No | Name of the Bidder | DEO's Remuneration per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI(3.25 %) (Rs) | Admin Charges (5%) (1+2+3) (Rs) | GST 18% (1+2+3+4) (Rs) | Total (1+2+3+4+5) (Rs) | Required Staff | Cost for One year (Rs) (6x7x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | M/s. Sri Balaji Agencies (L1) | 12,630 | 1642 | 410 | 734.10 | 2775 | 18191 | 136 | 2,96,87,875 |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Sri Balaji Agencies (L1) அவர்களின் ஒப்பத்தொகை ரூ.2,96,87,875/-யானது அலுவலக மதிப்பீடான ரூ.3,11,01,024/- ஒப்பிடுகையில் (-)5% (Exclusive GST) (lower) குறைவாக உள்ளது.

எனவே, இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்ப கூர்ந்தாய்வு குழு 24.04.2023 மற்றும் 25.04.2023 அன்று கூடி கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்கிறது.

1. மேற்கண்ட பணிக்கு பணியாளர்களை பணியமர்த்த, சரியான நிர்வாக கட்டணம் நிர்ணயிக்க ஏதுவாக மறு ஒப்பம் கோரப்பட்டுள்ள நிலையில், தற்போதைய ஒப்பந்தத்தில் நான்கு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டுள்ள நிலையிலும்,
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் நிர்வாக கட்டணத்தை மேலும் குறைக்க இயலாது என தெரிவித்துள்ள நிலையிலும்,
3. பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவசேவைகள் துறையில், சேவைகளை தடையின்றி தொடர, அத்தியாவசியமாக பணியாளர்கள் தேவைப்படுதால், அவசர அவசியம் கருதியும்,

4. ஒப்பந்ததாரர் இறுதியாக ஒப்புக்கொண்ட நிர்வாக கட்டணமானது அலுவலக மதிப்பீட்டிற்குள் உள்ளதாலும், அதாவது, ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.2,96,87,875/-யானது அலுவலக மதிப்பீடான ரூ.3,11,01,024/- உடன் ஒப்பிடுகையில் (-)5% (Exclusive GST) (lower) குறைவாக உள்ளதாலும்,

குறைந்த ஒப்பத் தொகை அளித்துள்ள M/s. Sri Balaji Agencies (L1) நிறுவனத்தினரின் ஒப்பத்தினை ஏற்றுக்கொள்ள ஒப்பந்தகூர்ந்தாய்வு குழு பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை மற்றும் மருத்துவசேவைகள் துறைக்கு தேவையான, 136 கணினி பதிவாளர்கள் ஒரு வருட காலத்திற்கு (பணி ஆணை வழங்கிய நாளிலிருந்து) பணியமர்த்த மின்னணு ஒப்பம் கோரியதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Sri Balaji Agencies நிறுவனத்தினரின் ஒப்பத்தினை ஏற்கவும் மற்றும் மேற்காணும் நிறுவனத்திற்கு ரூ. 2,96,87,875/- (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்றி ஆறு இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து எண்ணூற்றி எழுபத்தி ஐந்து மட்டும்) க்கு பணியாணை வழங்கவும்,
2. மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த தொகையில் 2% பிணை வைப்பு தொகையாக பெறவும் மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ளவும், பணி முடிந்து பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கும்,
3. இதற்கான செலவினம் மாநகராட்சி நிதியில் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி கோரிய குறிப்பில்,

மாண்புமிகு மேயர் அவர்களின் மேற்குறிப்பில், பொது சுகாதார துறைக்கு தேவையான 136 எண்ணிக்கையிலான கணினி பதிவாளர்களை அவசரம் மற்றும் அவசியம் கருதி ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்த நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) ஆகியவற்றின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுவதற்கு அனுமதித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"19.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.045/2023, நாள்.19.05.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"
>
> *"26.05.2023* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.133/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

**********

**ம.அ.5ந.க.எண்.சி2/4320/2022**

**கூடுதல் தலைமைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:339/2023** **பொருள் எண்.61**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-12,13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை துப்புரவு பணி மேற்கொள்ள - நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக - 01.05.2023 முதல் 31.10.2023 வரை 6 மாதங்களுக்கு 966 எண்ணிக்கையிலான தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12, 13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள பகுதிகளில் துப்புரவு பணிகளான தெருக்களில் கூட்டுவது, குப்பைகளை அகற்றுவது மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு 2106 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையர் அவர்களின் 16.11.2022 நாளிட்ட ஆணையின்படி மேற்கண்ட பணியாளர்களில் உள்ள காலிப்பணியிடங்களை 965 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமனம் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மன்ற தீர்மான எண். 602/2022, நாள்: 16.11.2022 பெறப்பட்டு 965 எண்ணிக்கையிலான தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்கண்ட மன்ற தீர்மானத்திற்கான பணிக்காலமானது 30.04.2023 அன்றுடன் முடிவடையவுற்றது.

மண்டலம்-5 ஐ சார்ந்த பகுதிகளில் சென்னையில் முக்கிய பழமை வாய்ந்த இராயபுரம், பிராட்வே, எம்.சி ரோடு, வண்ணாரப்பேட்டை, எழும்பூர் போன்ற பகுதிகள் உள்ளடக்கியதாகும். மேலும், கடற்கரை சாலைகள், தலைமைச் செயலகம், நேவல் கேஸ், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் ரிப்பன் கட்டிட வளாகத்தில் சென்னை மாநகராட்சி பணியாளர்களை கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5க்கு உட்பட்ட பகுதிகளில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, அரசு கண் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை, சென்னை தீவுத் திடல், சென்ட்ரல் இரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், பிராட்வே பேருந்து நிலையம், மூலக்கொத்தளம் இடுகாடு, சென்னை பெருநகர் குற்றவியல் நீதிமன்றம், அல்லிக்குள வளாகம் மற்றும் நீதிமன்றம், பீச் ஸ்டேஷன் இரயில் நிலையம், பழமை வாய்ந்த இந்து கோவில்கள், பழமை வாய்ந்த மசூதிகள், அரண்மனைக்கார தெரு, கிருஸ்துவ ஆலயம், சென்னை துறைமுகம், சென்னை எழும்பூர் அருங்காட்சியகம், பூங்காக்கள், விளையாட்டு திடல், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் ஆகியன உள்ளன. மேற்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்வதால் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட மன்ற தீர்மானத்தின் பணிக்காலமானது 30.04.2023 அன்று முடிவடைந்துள்ளது,

தற்போது கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு காலிபணியிடங்களுக்கு தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்து துப்பரவு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

<u>துப்புரவு பணியாளர் தேவைப் பட்டியல் கணக்கீடு:</u>

| பகுதி எண் | வார்டு எண் | ஒப்பளிக்கப்ட்ட நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 30.04.2023 அன்று பணிபுரிந்த நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 30.04.2023 அன்று மொத்த காலி பணியிடம் | தற்போது கோட்டம் வாரியாக குழுக்களில் பணிபுரியும் NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (7) | (8) |
| 12 | 49 | 102 | 56 | 46 | 37 |
| | 50 | 130 | 51 | 79 | 57 |
| | 51 | 90 | 54 | 36 | 36 |
| | 52 | 126 | 55 | 71 | 50 |
| | 53 | 153 | 64 | 89 | 87 |
| | TPF | 34 | 22 | 12 | 20 |
| 13 | 54 | 109 | 61 | 48 | 43 |
| | 55 | 87 | 53 | 34 | 31 |
| | 56 | 101 | 54 | 47 | 35 |
| | 57 | 188 | 76 | 112 | 101 |
| | 60 | 187 | 68 | 119 | 97 |
| | LFZ | 42 | 20 | 22 | 38 |
| 14 | 58 | 158 | 92 | 66 | 82 |
| | 59 | 170 | 119 | 51 | 84 |
| | 61 | 169 | 95 | 74 | 65 |
| | 62 | 120 | 68 | 52 | 52 |
| | 63 | 117 | 80 | 37 | 44 |
| | TASK FORCE | 23 | 8 | 15 | 0 |
| மொத்தம் | | 2106 | 1096 | 1010 | 959 |

| | |
|---|---|
| ஒப்பளிக்கப்ட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | **2106** |
| தற்போது பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | **1096** |
| நிரந்தர துப்புரவு பணியாளர்கள் காலிபணியிடம் | **1010** |
| சுலாப் பணியாளர்களின் எண்ணிக்கை | **44** |
| நிரப்பப்படவேண்டிய NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | **966** |

மண்டலம் - 5 வார்டு 49 முதல் 63 வரை, TPF, LFZ, மற்றும் TASK FORCE ஆகிய வார்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 2106 ஆகும். இதில் கடந்த 01.11.2022 முதல் 30.04.2023 வரை சுமார் 965 பணியிடங்களுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் வயது முதிர்வு/தன்விருப்ப ஓய்வு, இறப்பு, பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வு காரணங்களால் கூடுதலாக 45 பணியிடங்கள் காலியாக உள்ளது. தற்போது கோட்டம் 49 முதல் 63 வரை, TPF, LFZ, TASK FORCE ஒதுக்கப்பட்டுள்ள 2106 பணியாளர்களில் 1096

பணியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் தற்போது 1010 பணியிடங்கள் காலியாக உள்ளது. இதில் மண்டலம் – 5ல் 50 குழுக்கள் மூலமாக சுமார் 959 தற்காலிக துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 5 அனைத்து இலவச கழிப்பிடங்களும் பராமரிக்கும் பணிகள் தனியார் மயம் செய்யப்பட்ட காரணத்தால் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் காலிபணியிடத்தில் 44 எண்ணிக்கையிலான சுலாப் பணியாளர்கள் நிரப்பிக்கொள்ள முதன்மை செயலர்/ஆணையர் அவர்களிடம் 03.04.2023 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு மன்றத்தீர்மான எண். 253/2023 நாள் 03.04.2023 பெறப்பட்டது.

எனவே, மண்டலம் – 5ல் நிரப்பப்படவேண்டிய 1010 எண்ணிக்கையிலான NULM துப்புரவு பணியாளர்களில் 44 எண்ணிக்கையிலான சுலாப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டது போக மீதமுள்ள 966 காலிபணியிடங்களை தற்போது பணிபுரிந்து வரும் பணியாளர்களை கொண்டு தெடர்ந்து பணிமேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதன்படி திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 24.01.2023 நாளிட்ட சுற்றறிக்கையின்படி நாள் ஒன்றுக்கு ரூ.500/- என வழங்க குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 966 பணியாளர்களுக்கு 01.05.2023 முதல் 31.10.2023 வரை 184 நாட்களுக்கு ரூ.184 x 966 x 500 = ரூ.8,88,72,000/- (ரூபாய் எட்டு கோடியே எண்பத்து எட்டு இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரம் மட்டும்) தேவைப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பணிக்காக கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210-100-601ன் கீழ் தீர்வு செய்ய வேண்டி உள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி 12,13 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் 966 பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 01.05.2023 முதல் 31.10.2023 வரை தற்காலிக துப்புரவு பணியாளர்களை அவசரம் அவசியம் கருதி 01.05.2023 முதல் தொடர்ந்து பணியமர்த்தியதற்கும் மற்றும் 01.05.2023 முதல் ஊதியம் வழங்க பின்னேற்பு அனுமதியும்,

2) எதிர் வரும் காலத்தில் மண்டலம்-5 துப்புரவு பணியானது தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் இப்பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் மேற்கொள்ளப்படும் இப்பணியாணையினை ரத்து செய்ய அனுமதி வேண்டியும்,

3) தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் பணிக்கப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை 966க்கு மிகாமல் கோட்டங்களின் தன்மைக்கு ஏற்றவாறு தற்காலிக துப்புரவு பணியாளர்களை மண்டல அலுவலர் – 5 அவர்களின் அளவிலேயே கோட்டங்களுக்கு இடையே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வேண்டியும்,

4) கூடுதலாக ஏற்பட்ட காலிபணியிடங்களுக்கு சுய உதவிக் குழுக்கள் மூலமாக பணியமர்த்திக்கொள்ளவும்,

5) தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பணியாளர்கள் தொடர்ந்து முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை என்றால் அவர்களை பணி மற்றும் குழுவிலிருந்து நீக்கம் செய்திடவும் அவர்களுக்கு பதிலாக வேறு பணியாளர்கள் குழுக்கள் மூலமாக நியமிக்க அனுமதி வேண்டியும்,

6) மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 966 பணியாளர்களுக்கு 01.05.2023 முதல் 31.10.2023 வரை 184 நாட்களுக்கு ஆகும் செலவு தொகை ரூ.184 x 966 x 500 = ரூ.8,88,72,000/- (ரூபாய் எட்டு கோடியே எண்பத்து எட்டு இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரம் மட்டும்) ஆகும். மேலும் எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்படும் ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

7) மேற்படி பணிகளுக்கான செலவு தொகையை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210-100-601ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “26.05.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.146/2023, நாள்.26.05.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.**

**********

**பொ.து.ந.க.எண்.ஈ3/12145/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:340/2023** **பொருள் எண்.62**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பணியமைப்பு - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.**

அரசாணைகள் மற்றும் செயல்முறை ஆணைகளின்படி, கீழ்க்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ, எண், | பெயர் | அரசாணை எண் மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | திரு. செ. பால் பிரின்சிலி ராஜ்குமார் மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர், மண்டலம் – 10, பெருநகர சென்னை மாநகராட்சி. | அரசாணை (வாலாயம்) எண். 1575, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 29.03.2023 | 06.04.2023 மு.ப. |
| 2 | திரு. இரா. கோபாலகிருஷ்ணன் தனி வட்டாட்சியர், (நிலம் (ம) உடைமை ) பெருநகர சென்னை மாநகராட்சி | சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/001/2023, நாள்: 06.04.2023 | 10.04.2023 பி.ப. |
| 3 | திரு. வி. நவேந்திரன் நகராட்சி ஆணையர்/ மண்டல அலுவலர், மண்டலம்-1 பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வா) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை, நாள்: 13.04.2023 | 19.04.2023 மு.ப. |
| 4 | திரு. என். நிரேஷ்குமார் தோட்டக்கலை உதவி இயக்குநர்/ பூங்கா கண்காணிப்பாளர் வட்டார அலுவலகம் (தெற்கு) பெருநகர சென்னை மாநகராட்சி | சென்னை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ப.அ.ப1/540/2022, நாள்: 06.02.2023 | 21.04.2023 மு.ப. |
| 5 | திருமதி. ம. பிரியதர்ஷினி தோட்டக்கலை உதவி இயக்குநர்/ பூங்கா கண்காணிப்பாளர் வட்டார அலுவலகம் (வடக்கு) பெருநகர சென்னை மாநகராட்சி | சென்னை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ப.அ.ப1/540/2022, நாள்: 21.04.2023 | 24.04.2023 மு.ப. |
| 6 | டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன் கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண். 2014, பொது(சிறப்பு-அ)த் துறை, நாள்: 13.05.2023 | 15.05.2023 மு.ப. |

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது".**

**********

**ம.அ.1.ந.க.எண். பி2/1438/2022**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:341/2023** **பொருள் எண்.63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1, பகுதி-1,வார்டு -2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பழைய பகுதி-1 அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1, வார்டு -2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பழைய பகுதி-1 அலுவலக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது,

| வ. எண் | வார்டு எண்-2 | மண்டலம் -1 |
|---|---|---|
| 1. | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | வார்டு -2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பழைய பகுதி-1 அலுவலக கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1999-2000 ஆம் ஆண்டு |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு | தரை தளம் 263.5 SQ.M |
| 4 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 263.5 SQM |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ.245088.70 |
| 6 | அந்த கட்டிடம் தற்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் இல்லை |
| 7 | அநத் கட்டிடம் இடித்த பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது | டிஜிட்டல் நூலகம் மற்றும் அறிவு சார் மையம் |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் ? | கட்டிடத்தில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது. இடிந்து விழும் அபாயம் உள்ளது |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மண்டல அலுவலர் – 1 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -1 பகுதி-1, வார்டு -2ல் கத்திவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பழைய பகுதி-1 அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.5.நக.எண்.5558 /2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:342/2023** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, பகுதி - 13, வார்டு -57, ஸ்டிரிங்கர் தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்- 5, பகுதி-13, வார்டு-57க்கு உட்பட்ட ஸ்டிரிங்கர் தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ளது. மேலும் மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடமானது சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. எனவே, இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளது மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடிப்பது அவசியமாகிறது.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம் = 12.40மீ X 10.60மீ = 131.44 சதுர மீட்டர்

முதல் தளம் = 12.40மீ X 3.60மீ = 44.64 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ. 2,750.24

எனவே, மண்டலம்-5, வார்டு-57க்கு உட்பட்ட ஸ்டிரிங்கர் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ள இந்த பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

******

**ம.அ.5.ந.க.எண்.5559 /2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:343/2023** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, பகுதி - 13, வார்டு -57 - வ.உ.சி சாலை (வால்டாக்ஸ் ரோடு) - கதவிலக்க எண்.252 கொண்ட கட்டிடம் 30.01.2021 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது - பூட்டி சீல் வைக்கப்பட்ட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-57 க்கு உட்பட்ட வ.உ.சி சாலையில் (வால்டாக்ஸ் ரோடு) அமைந்துள்ள கதவிலக்க எண்.244 மற்றும் 264 என்ற விலாசத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் தலைவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புதியதாக சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு அறிவுறுத்தினார். இந்த இடத்தின் மொத்த பரப்பளவு 13293 சதுர அடி ஆகும்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் தலைவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் அறிவுறுத்தலின் படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இந்த இடத்தினை கள ஆய்வு மேற்கொண்டு அளவீடு செய்யப்பட்டது. இந்த இடத்தில் சமுதாய நலக்கூடம் கட்ட மண் ஆய்வு, வரைபடம் மற்றும் கட்டமைப்பு வடிவமைப்பு *(Strutural Design)* செய்ய கட்டிட வடிவமைப்பாளர் (*Architect)* அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகளின் படி (*Tamil Nadu Combined Development and Building Rules*) சமுதாய நலக்கூடம் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் தலைவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களும் அறிவுறுத்தியுள்ளனர்.

அதன் படி இந்த இடத்தில் வாகனம் நிறுத்துவதற்கும், வாகனம் உள்ளே நுழைந்து சுற்றி வருவதற்கும் 20 அடி இடைவெளி பாதைக்காக வ.உ.சி சாலையில் (வால்டாக்ஸ் ரோடு) உள்ள கதவிலக்க எண்.245 முதல் 254 வரையிலான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடங்கள் இடிக்க உள்ளதால் தற்போதைய நிலைமை குறித்து நிலம் மற்றும் உடைமைத்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கதவிலக்க எண்.252, வ.உ.சி சாலையில் (வால்டாக்ஸ் சாலை) அமைந்துள்ள கட்டிடமானது 30.01.2021 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டது. எனவே மிகவும் பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ள அக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளது மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த கட்டிடத்தை இடிப்பது அவசியமாகிறது.

இக்கட்டிடத்தின் மொத்த பரப்பளவு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம் = 12 மீ X 3.70மீ = 123.70 சதுர மீட்டர்

முதல் தளம் = 12 மீ X 3.70மீ = 123.70 சதுர மீட்டர்

இரண்டாம் தளம் = 12 மீ X 3.70மீ = 123.70 சதுர மீட்டர்

ஆகவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ள கதவிலக்க எண்.252, வ.உ.சி சாலையில் (வால்டாக்ஸ் சாலை) உள்ள பூட்டி சீல் வைக்கப்பட்ட கட்டிடத்தை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.க.கு.ந.க.எண். அ7/916/2023**

**கூடுதல் தலைமை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.05.2023 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:344/2023** **பொருள் எண்.66**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு 01.04.2023 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு பின்னேற்பு அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.144 நிதி(படிகள்)த்துறை, நாள்:17.05.2023ல் திருத்தப்பட்ட தொகுப்பூதியம் (Consolidated Pay) / நிலையான ஊதியம் (Fixed Pay) / மதிப்பூதியம் (Honorarium) பெறும் பணியாளர்களுக்கு 01.04.2023 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) அனுமதித்து கீழ்க்கண்டவாறு அனுமதித்து ஆணைகள் பிறபிக்கப்பட்டுள்ளன.

2. அரசாணையின் விவரம் பின்வருமாறு:-

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.144, Dated:17th May 2023.**

(*Sobakiruthu, vaigasi* -03,*Thiruvalluvar Aandu 2054)*

**ABSTRACT**

**AD-HOC INCREASE** - Employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium - Another Ad-hoc Increase from **01-04-2023** - Orders - Issued.

**Read the fo11owing:-**

1. G.O.Ms.No.9, Finance (Allowances) Department, dated: 06-01-2023.
2. G.O.Ms.No.142, Finance (Allowances) Department, dated: 17-05-2023.

-o0o-

**ORDER:**

In the Government Order first read above, orders were issued sanctioning another Ad-hoc Increase in respect of employees those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium as shown below:-

| With effect form | Ad-hoc Increase | |
|---|---|---|
| | Employees drawing upto Rs.2500/p.m. | Employees drawing above Rs. 2500/p.m. |
| (1) | (2) | (3) |
| 01-01-2023 | Rs. 50 | Rs. 100 |

2. In the Government Order second read above, orders were issued enhancing the Dearness Allowance payable to Government employees who are drawing pay in Levels of Pay in the respective Pay Matrix with effect from 01-04-2023.

3. Government has therefore, decided to grant another Ad-hoc Increase to those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium with effect from 01-04-2023. Accordingly, Government direct that employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium be allowed another Ad-hoc Increase with effect from 01-04-2023 as detailed below:-

| With effect form | Ad-hoc Increase | |
|---|---|---|
| | **Employees drawing upto Rs. 2500/p.m.** | **Employees drawing above Rs. 2500/p.m.** |
| **(1)** | **(2)** | **(3)** |
| 01-04-2023 | Rs. 50 | Rs. 100 |

4. The payment of Ad-hoc Increase for the month of April,2023 shall be drawn and disbursed by existing cashless mode of Electronic Clearance System (ECS).

5. This order shall also apply to the employees of Local Bodies, and Sweepers working in Rural Development and Panchayat Raj Department.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T.UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

3. எனவே, மேற்கண்ட அரசாணையின் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் அவர்களின் அனுமதி 22.05.2023 அன்று பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள், மற்றும் மண்டல அலுவலர்கள் (1 முதல் 15 வரை), 22.05.2023 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

4. தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக, அரசாணை (நிலை) எண்.144 நிதி (படிகள்)த்துறை, நாள்:17.05.2023.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.**

**********